புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

௨

விரோதிவூ (1889) ஆவணிமீ உஉடூ ஆரம்பமானது.

பத்திராக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5-00 |
| இங்கிலீசும் தமிழும் | 9.00 |
| இலங்கை இந்தியா | ரூ 8-00 |
| இங்கிலீசும் தமிழும் | 12-00 |
| தேசாவரப்பகுதி | ரூ 9-00 |
| இங்கிலீசும் தமிழும் | 13-00 |

முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பரவிகிதம்.

முதன்முறைக்கு:

| | |
|---|---|
| ,, ஒருகலம் ரூபா | 10·00 |
| ,, அரைக்கலம் ,, | 5·50 |
| ,, கால்கலம் ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினு லன்றிக் கவனிக்கப்படா.

"எவனத்தாலு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிநுண்சிவ தேகம் சிவமயமாக மங்களமோங்கப், பார்பூத்த புறச்சமய நிருளகலப் பரம்பூத்த சைவநிலைபாரோர் தாங்கப்,
ஏர்பூத்த வெண்ணீறு துலங்கப் பிறைபூத்த சடைநல்லப் பெருமான் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென மும்மதம்பூத்த விநாயகனடி வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவ ஹூ சித்திரைமீ உசஉ ( 1935 மே 9 வியாழக்கிழமை. ) {இலக்கம்—அ



## கந்தரலங்காரம்.

மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

இ—ள்: மாலோன் மருகனை-விஷ்ணுமூர்த்தியின் மருகரும்; மன்றுஆடி மைந்தனை-கனகசபையில் ஆனந்தக் கூத்தாடுபவராகிய நடராச மூர்த்தியின் திருக்குமாரரும்; வானவர்க்கு மேலான தேவனை-தேவர்களுக்கு மேலான கடவுளும்; மெய்ஞ்ஞான தெய்வத்தை-உண்மை ஞானத்தையருளுந் தெய்வமும்; மேதினியில் சேல் ஆர் வயற் பொழிற் செங்கோடனை-இப்பூவுலகத்திலுள்ள கம் சேல் மற்சங்கள் நிறைந்த வயல்களுஞ் சோலைகளும் பொருந்தியதுமாகிய திருச்செங்கோடு என்னுந்தலத்தில் எழுந்தருளிய முருகக்கடவுளை; சென்று கண்டு தொழ-அடியேன் போய்த் தரிசித்து வணங்க; அந்த நான்முகன் நாலாயிரங்கண் படைத்திலனே-நான்கு முகங்களையுடைய அந்தப் பிரமதேவர் நாலாயிரங் கண்களைத் தமியேனிடத்துப் படைத்தாரில்லையே. எ—று.

நாலாயிரங்கண் தரிசித்தற்காம். அந்தப்பண்டி கட்டு; ஏ-கழிவிரக்கம். இது முருகக்கடவுளின் சகள வடிவத்தின் சிறப்பைக் கூறியவாறும்.

திருச்செங்கோட்டிற் கோயில் கொண்ட முருகமூர்த்தியின் திருக்கோலத்தைத் தரிசித்தற்கு என் இரு கண்களும் அமையா என்றபடி (கூ0)

## தலைமைக்காரர் வேண்டாம்.

### கிராமங்களிற் பொலிசார் மயம்.

### மிஸ்ரர் தம்பையாவின் புதிய யோசனை.

வட இலங்கைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி எனச் சொல்லப்படும் மிஸ்ரர் A. P. தம்பையா, தலைமைக்காரர் ஆட்சி முறையைப்பற்றி விசாரணை புரிந்துவரும் சங்கத்துக்குமுன்னுற் சாட்சியம் பகர்கையில், எந்த நல்லவனுயினும், விதானை, உடையார்மார் என்னும் தலைமைக்காரனுக நியமிக்கப்பட்டவுடன் கெட்டவனுகின்றுன் என்று குறிப்பிட்டார்.

இந்தத் தலைமைக்காரரைக் கொண்டு பரிபாலனஞ் செய்யும் ஒழுங்கு முழுவதும் ஒழிக்கப்படுதல் வேண்டும் எனவும், கிராமங்களிற் பொலிசாரே சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பை ஏற்கவேண்டும் என்றும் மிஸ்ரர் தம்பையா கூறினுர்.

தலைவர்: (மிஸ்ரர் M. M. உவெடர்போன்) தற்போது தலைமைக்காரருக்கு அளவுக்கு மேற்பட்ட வேலை கொடுக்கப்படுகிறதே.

மிஸ்ரர் தம்பையா: தலைமைக்காரர் என்ற பெயரே இல்லாது அந்த ஒழுங்கை முற்றுக ஒழித்தல் வேண்டும். அவர்களுக்கு ஒரு வேலையும் இல்லை; அவர்களைத்போலப் பொறுப்பற்றவர்கள் இல்லை.

ஒவ்வோர் பகுதியைப் பிரிவுகளாக்கி, ஒவ்வோர் பிரிவுக்கும், தலைமைக்காரனுக்குப் பதிலாக ஓர் சார்ஜன்ரின்கீழ் இரு பொலிசாரை அமர்த்தவேண்டுமென்றும், இது அதிகம் பொருட்செலவுக் கேதுவாகிலும், அது ஊரவர்க்கு அதிகம் நன்மை விளைக்கும் என்றும் மிஸ்ரர் தம்பையா கூறினுர்.

விசாரணைச்சபை தலைமைக்காரர் இருக்கவே வேண்டுமெனத் தீர்மானித்தால், விதானைமார் மாத்திரம் கொஞ்சக்காலத்துக்கு இருக்கலாம். மணியகாரன்மார், உடையார்மார் இவர்கள் யாவரும் தவிர்க்கப்படல் வேண்டும் என்றும், கிராமங்களில், தலைமைக்காரராலேயே அதிகம் சச்சரவு உண்டாகின்றதெனவும், அங்கு ஓர் கலகம் நேர்ந்தால் தலைமைக்காரராயுள்ளவர் நடுவுநிலைமை வகித்து நீதியைச் செலுத்துவதற்குப் பதிலாக ஓர் தலைசார்ந்து கர்மம் ஆற்றுகின்றனர் என்றும் மிஸ்ரர் தம்பையா அபிப்பிராயங் கூறினர். தலைமைக்காரன் ஒருவரின் ஒருதலைசார்தலினுல் ஓர் கொலை நிகழ்ந்த விஷயத்தைப்பற்றி மிஸ்ரர் தம்பையா விசாரணைசபைக்கு எடுத்துரைத்தார்.

## சமயம்-அது மாற்றமடையுமா?

(T. L. இராமக்கிருஷ்ணன்)

சநாதன தர்மம் ஓர்போதும் மாற்றமடையாது: ஆனுல் சநாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்களின் ஆசாரநுட்டானங்களும் பழங்க வழக்கங்களுங் காலத்திற்கேற்ற கோலமாய் மாறுதலையும் அப்படி மாற்றமடைவது யுக தர்மத்தின் பாற்பட்டதாகும். உதாரணமாக ஓர் விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஆத்மாவானது எங்கும் வியாபகமாயுள்ளது, அது தானேயாய் என்றும் அழியாததாய், இறப்பு பிறப்பற்றதாய் உள்ளது என்பது ஓர் பெரும் உண்மை. இந்த உண்மை திரேதாயுகத்திலும் கலியுகத்திலும் ஒன்றுதான், இந்த உண்மை ஒருபோதும் மாற்றமடையாது ஆனுல் பக்குவதசை யடையமுன்னரேயே பெண்கள் விவாகமாக வேண்டுமென்ற வழக்கம் ஒருகாலத்திற் கேற்றதாயிருந்தது. இப்போது அவ்வழக்கம், இப்போதைய நிலைமைக்கு ஏற்றதல்ல என்பதை எவர்தான் மறுப்பர்? ஆனுல் எம் முன்னையோர் பெண்கள் பக்குவதசை யடையமுன்னரே மணமுடித்துக் கொடுக்கப்படல் வேண்டும் என விதித்துப் போயினரே, அவர்கள் விதித்தனவற்றை மீறலாகுமா என்று இப்போதைய நிலைமையிற் கேட்பவர்கள் பகுத்தறிவற்றவரே யென்க.

எமது மத்தியில் உள்ள பழையவர்கள் சிலர், எமது முன்னோர் விதித்துப் போயினவற்றிற் பிரதானமானவை எவை, அப்பிரதானமானவை எவை என்பதைப் பகுத்தறிய இயலாது பழைய சம்பிரதாயங்களையே கட்டிக்கொண்டு இன்னும் அழுகிறுர்கள் இதன பயனுகவே பழையவர்களுக்கும், முன்னேற்றமடைய விழையும் வாலிபர்களுக்கு மிடையே சதா பிணக்கு நிகழ்கின்றது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினுனே என்னும் மாபெரும் உண்மையைப் பழக்கவழக்க விஷயங்களில் எம் பழையவர்கள் உணராதிருக் கின்றுர்கள். ஆசாராநுட்டானங்களை சமயம் என அவர்கள் விபரீதமாக எண்ணிக் கொள்ளுகிறுர்கள்.

இன்னோர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். ஒவ்வொரு ஹிந்துவும் தனது தலையிற் சிகை வைத்திருக்க வேண்டுமென்று எமது முன்னோர் கூறிப் போந்தனர். ஏன் சிகை வைக்கவேண்டும்; சிகை இல்லாமல் மொட்டையாய் இருந்தால் என்ன என்று விஞ்ஞான ஆராய்ச்சியிலும் தர்க்க நியாய சாஸ்திரங்களிலும் ஈடுபட்டுள்ள வாலிபர் கேட்பர். ஆனுல் சிகை வைத்திருக்க வேண்டுமென்று எமது முன்னோர் விதித்தது போலவே, மற்றும் சமயத்து மதகுருவர்களும் தத்தம் மதத்தினருக்கு விதித்திருக்கின்றனர். தாடி தவறுது வளர்க்க வேண்டும் என மகமதியரும், நீண்ட மயிர் வளர்த்து இருக்கவேண்டுமெனச் சீக்கியரும் கட்டாயமாக விதிக்கப்பட்டிருக்கிறுர்கள் சிகையுள்ளவன் ஹிந்து, தாடியுள்ளவன் மகமதியன், நீண்டமயிரும் ஈட்டி முதலியனவும் வைத்திருப்பவன் சீக்கியன் என்று ஒவ்வோர் சமூகத்தினரையும் பிரித்துக்காட்ட இவ்விதி மிகவும் ஏற்புடைத்தாம். ஆனுல் சிகையும் தாடியும் நீண்ட மயிரும் முறையே, ஹிந்து, மகமதியர், சீக்கியம் என்னும் மதங்களா? இவையெல்லாம் வெளித் தோற்றங்களேயாம். பஞ்சமா பாதகங்களையும் புரிந்து தீவினை செய்து வருபவன் சிகையைத் தலையில் வைத்திருப்பதால் உண்மை ஹிந்து ஆவனோ? அல்லது சிகையின்றி சதா பகவந்நாமாவை ஸ்மரித்துத் தன் கர்மாவை விரும்பி வெறுப்பின்றிச் செய்பவன் ஹிந்துவல்லனுய் விடுவனோ?

விவேகாநந்தரை, சுவாமி என்றும் ராமக்கிருஷ்ணரை பரமஹம்ஸர் என்றும், காந்தியை மகாத்மாவென்றும் அழைக்க வொண்ணுது என்று ஓர் பழைய வைதிகர் எனக்குக் கூறினுர் ஏன் என்று யான் கேட்டதற்கு விவேகாநந்தர் பிராமண குலத்தில் பிறக்காதபடியால் சுவாமியெனவும், இராமக்கிருஷ்ணர் (சாஸ்திரங்கள் விதித்தபடி) கானகம் புகுந்து கடுந்தவம் செய்யாமையால் பரமஹம்ஸர் எனவும், காந்தி அரசியல் வாழ்வில் ஈடுபடுவதால் மகாத்மா எனவும் அழைக்கப் படுதற்கு அருகரல்லர் என்று இப்பழைய வைதிகர் கூறினுர்

ஸ்ரீ இராமக்கிருஷ்ணர் பரமஹம்ஸர் அல்லர் என்று கூறும் மூடாத்மாக்களைப்பற்றி யாம் கூறுவது என்ன? தாம் சூத்திர ஜாதியைச் சேர்ந்தபடியால் சந்நியாசியாவதற்கு அருகரல்லர் என்று தம்மைப்பற்றிக் கூறியவர்களுக்கு ஸ்ரீமத் விவேகாநந்தர் தமது பிரசங்கங்கள் மூலமாக நல்ல விடையளித்திருக்கிறுர். காந்திக்குப் பாரத மக்களே "மகாத்மா"வெனும் நாமத்தை நல்கியிருக்கின்றனர். "வறியவர்களின், ஏழைகளின் துர்ப்பாக்கிய நிலைமையைக் கண்டு எவர் கண்ணீர் உகுக்கின்றுரோ, அவரையே நான் மகாத்மா என்பேன்; மற்றவர்கள் துராத்மாக்களே" என்று ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தர் கூறியமை மகாத்மா விஷயத்திற் குறிப்பிடத் தக்கதாம்.

மேலே காட்டப்பட்டன போன்ற மூட எண்ணங்கள் இன்னும் பழையோர்கள் மனத்தை விட்டகன்றபாடில்லை. திருவருட்செல்வராகிய ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரவர்கள் சந்நியாசிகளை சமூகசேவையிற் பயிற்றி அதன் மூலமாகப் பாரதநாட்டிற்கு இன்றும் என்றும் செயற்கருஞ் சேவை செய்தமையை யார் தான் மறுப்பர்? அவர் தமது சந்நியாசிகளைக் குகைகளிலும், கானகங்களிலும் அடைத்து வைத்திருக்கவில்லை. பொதுமக்களுடன் கலந்து சேவை செய்யுமாறு விடுத்தார். ஆனுல் இப்போது பாரதநாட்டிற்கு மகத்தான சேவை செய்து ஹிந்துமதத்தின மேன்மைகளை மேனுட்டினர்க்கும் உணர்த்தி வாராநிற்கும் ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடத்துச் சந்நியாசிகளைத் துறவிகள் என்று கூற இப்போதும் சில பழையோர் பின்வாங்குவர். இச் சந்நியாசிகள் குடை பிடிக்கின்றனர், பஸ் வண்டிகள், புகைரதங்களிற் பிரயாணம் செய்கின்றனர். பெரிய மாடமாளிகை கூடங்களிற் புக்கு வசிக்கின்றனர்; எனவே இவர்கள் எமது சாஸ்திர இலக்கணப்படி நடப்பவர்களல்லர், ஆகவே, இவர்கள் சந்நியாசிகள் அல்லர் என்று நம் பழையவர் கூறுகின்றனர் அந்தோ இவர்கள் வெளித்தோற்றத்தையே அவ்வளவாக வற்புறுத்துகின்றனர் அன்றி, துறவு என்றால் என்ன, என்னும் இன்னோன்னவற்றைப்பற்றி ஆராய்கின்றனரில்லை.—(வரும்)

### விளம்பரம்.

சிங்களம் படிப்பித்தல்.

யாழ்ப்பாணம் ஸ்டேசன் றோட்டில் "குணசெவன" என்னும் இல்லத்தில் வசிக்கும் ஸ்ரீமதி G. G. நாதாவதி சனி, ஞாயிறு ஒழிந்த ஏனைய தினங்களில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிக்கிடையில் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தில் பாடம் சொல்லிக் கொடுப்பார்.

(Mis. 36. 9, 13-5-35.)

---


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவ௵

சித்திரை௴ உ௬௨ வியாழக்கிழமை.


## காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளல் வேண்டும்.

பூர்வத்தில் இவ்விலங்கா தீபமானது சகல செல்வங்களோடு கூடியதாயிருந்த தென்றும் இலங்கையிலுள்ள வியாபாரிமார் நாவாய் வாயிலாக முத்து சங்கு முதலிய கடல்படு திரவியங்களையும் பருத்திப் பஞ்சு, நெல் முதலிய பொருள்களையும் வேற்று நாட்டிற்கு அனுப்பி வாணிகஞ் செய்தன ரென்றும் இலங்கைச் சரித்திர வாயிலாக அறியலாகும். அக்காலத்தில் இலங்கை அத்துணை உன்னதநிலையில் விளங்கியமைக்குக் காரணம் சுதேசமன்னரால் பரிபாலனஞ் செய்யப்பட்டமையேயாகும். சுதேசமன்னர் விவசாயத்தை இவ்விலங்கையில் விருத்தி செய்தாரென்பதற்குச் சான்றாய் விளங்குவன, வன்னிப் பகுதியிலும் அநுராதபுரப் பகுதியிலும் காணப்படும் செயற்கைவாவிபோன்ற குளங்களேயாகும்.

இவ்விலங்கையானது வேற்றரசர் கைப்பட்ட பின்பு காலகதியில் தனது மகத்துவமனைத்தும் குன்றப்பெற்று இப்பொழுது வாழ்க்கைக் கின்றியமையாப் பொருள்கள் எவற்றினுக்கும் அந்நிய நாடுகளையே எதிர்பார்த்தநிலையில் இருக்கின்றது. இலங்கை தாரித்திரியதசை யடைந்தமைக்குக் காரணமும் இதுவேயாகும். சென்ற சில வருடங்கட்கு முன்னர் இந்த இலங்கையிற் பணமுட்டு, தொழிற்பஞ்சம், வியாபார வீழ்ச்சி யென்னுமிவைகள் ஏற்படுதலும் 'இனிமேல் எவ்வாறு காலம் போக்குவோம்" என்று இலங்கைவாசிகள் எல்லோரும் ஏக்கங் கொண்டனர். அரசினரும் யோசித்தனர். இவற்றின் பயனாக நமர் தேயிலையென்னுமிப்பொருள்கள் விஷயத்திற் கட்டுப்பாடு முதலியன ஏற்படலாயின. தேங்காய் கோப்பறு என்னுமிவைகளும் சிறிது விலையேறியன. சிங்களமக்களாயுள்ளார் அச்சமயத்தைத் தவறவிடாது, விவசாய முயற்சியையும், நெருப்புப்பெட்டி மெழுகுதிரி சவர்க்காரம் முதலிய கைத்தொழில் முயற்சிகளையும் விருத்திபண்ணலாயினர். எங்கள் தமிழ்ப் பிரதிநிதிகளைப் போலில்லாமல் சிங்களப்பிரதிநிதிகளும் மந்திரிமாரும் இந்த விருத்திகளிற் கண்ணுங் கருத்துமாயிருந்து ஒத்துழைக்கலாயினர். அதிகாரிகளும் கைத்தொழில் விவசாயமென்னுமிவற்றில் ஆராய்ச்சியுடையவராகிய மிஸ்ரர் குக என்பவரை, இவ்விலங்கையில எங்கெங்கே எவ்வெவ் வகையானபயிர்களை ஆக்கலாகும், எவ்வெவ் விடங்களில் என்னென்ன கைத்தொழின் முயற்சிகளைச் செய்தலாகும், வியாபாரத்தை எவ்வாறு விருத்திபண்ணலாமென்னுமிவைகளை ஆராய்ந்து தமக்கு அறிக்கை செய்யும்படி நியோகித்தனர். அவரும் இவ்விஷயமாகத் தமது ஆராய்ச்சியைக் காலந்தோறும் அரசினருக்கு வெளியிட்டு வருகின்றார். பல ஏதுக்களாலும் இந்தச் சமயத்தில் இந்நாட்டிலே கைத்தொழில் கமத்தொழில் விருத்தியடைந்து வரலாயின.

இனி, இலங்கைப்பொருள் வியாபாரமும் நலமடைந்து வருகின்றதென்பதையும் இப்பொருள்கள் அந்நியநாடுகளுக்கு முன்னரைக் காட்டிலும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதையும் சென்றவருட அறிக்கை வாயிலாக அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். 34-ம் ஆண்டில் இலங்கையில் இறக்குமதியான பொருள்களின் விலையைக்காட்டிலும் இலங்கையிலிருந்து ஏற்றுமதியான பொருள்களின் விலை 46000000 ரூபா அதிகமென்றும் 33-ம் ஆண்டைக்காட்டிலும் 100 விகிதம் மேலதிகமென்றும் தெரிவித்திருக்கின்றனர். இந்தச் சமாசாரம் இலங்கைவாசிகளெல்லாருக்கும் நமது அரசினருக்கும் பெரும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் தருவதாகும். ஆனால் தமிழ்மக்கள் வாசஸ்தானமாகிய வடமாகாணம் இப்பொழுதும் பழைய தாரித்திரிய நிலைமையிலேயே இருக்கின்றது. இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ளார் செய்யும் முயற்சிகளைப்பின்பற்றி இவ்வடமாகாணவாசிகளும் ஏனைய சனப்பிரதிநிதிகளைப் பின்பற்றி இம்மாகாணப்பிரதிநிதிகளும் கருமம் ஆற்றி ஈடேறுவதற்கு இதுவே வாய்ந்த சமயமாகும்.

---

## ஐரோப்பாவின் நிலைமை.

பன்னிரண்டு ஆண்டு காலமாக ஐரோப்பிய வல்லரசுகளால் நசுக்கப்பட்டுக் கிடந்த ஜெர்மனி தனது அடிமைத்தளையை அறுத்தெறிந்து ஆக்கிரமித்து எழுந்து விட்டது. அது தனது ஆயுத பலத்தைப் பெருக்கித் தன்னை இதுகாறும் அடிமைக் குழியில் ஆழ்த்தி வைத்த வல்லரசுகளுக்குக் கலக்கத்தை உண்டுபண்ணியிருக்கிறது. இவ் வல்லரசுகளோ ஜெர்மனி வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை மீறிவிட்ட தென்று கூக்குரலிடுகின்றனவே யொழிய அப்படி அந்நாடு அவ்வுடன்படிக்கையை மீறும் நிலைமை ஏற்பட்டதற்குத் தாமே பொறுப்பாளிகள் என்பதை உணர்கின்றனரில்லை. ஆயுதப்பரிகாரண நாட்டில் வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை நிபந்தனைகளைச் சற்றுத் தாராளமாகக் கைவிட்டுத் தனக்குச் சமத்துவம் அளிக்கவேண்டும் எனச் ஜெர்மனி வல்லரசுகளை மன்றாடிக் கேட்டது. அப்போதே வல்லரசுகள் ஜெர்மனியின் மன்றாட்டத்திற்குச் சற்றுச் செவிசாய்த்திருந்தால் அந்நாடு கட்டாய இராணுவச் சேவை முறையை ஏற்படுத்தியிருக்கமாட்டாது. நீர் மூழ்கிகளையும் ஆகாய விமானங்களையும் அபரிமிதமாகக் கட்ட முற்பட்டிருக்காது; ஆனால் ஓர் அரிய சந்தர்ப்பத்தை ஐரோப்பிய வல்லரசுகள் கைநழுவ விட்டன. எனவே, அதிருப்தியும் ஆத்திரமும் கொண்ட ஜெர்மனி சர்வதேச சங்கத்திலிருந்தும் ஆயுதப் பரிகாரண மகாநாட்டிலிருந்தும் விலகியது.

ஜெர்மனி சர்வதேச சங்கத்திலின்றும் ஆயுதபரிகாரண மகாநாட்டினின்றும் விலகியதைக் கண்ட வல்லரசுகள் கிலி கொண்டன; ஜெர்மனியின் நோக்கத்தை விபரீதமாக விளங்கிக்கொண்டு பலகோடி பவுண்கள் செலவிட்டுத் தத்தம் ஆயுதபலத்தைப் பெருக்க முயற்சி செய்தன; இந்த நிலைமையில், ஜெர்மனி சும்மா இருக்குமா? தனது கைவரிசையையும் அது காட்ட ஆரம்பித்தது. எனவே, ஆயுதப் பரிகாரணத்திற்கெனச் செய்த முயற்சிகள் ஆயுதப் பரிகாரணத்திற்காக மாறிவிட்டன. இப்படியான நிலைமையிலாயினும், ஐரோப்பிய இராச தந்திரிகள் சமாதானத்திற்கு முயற்சி செய்தனரா? நேர் மாறாக, இற்றலியைச் சேர்ந்த ஸ்ரெஸாவில் ஓர் மகாநாடு கூட்டி ஜெர்மனியின் நடத்தையைக் கண்டித்தனர். அம்மகாநாட்டில் ஜெர்மனியையும் அழைத்து, அதன் கோரிக்கை என்னவென்பதை அறிந்து ஓர் தீர்மானத்திற்கு வந்திருந்தால் நலமாயிருக்கும். ஆனால் அந்த நலம் பயக்கும் இராஜதந்திரம் ஐரோப்பிய அரசியல் வாதிகளிடம் எப்போதோ அற்றுப்போய்விட்டது. நேர்மாறாக, அவர்கள் எரியும் கொள்ளியை ஏறத் தள்ளுவதுபோல, ஜெர்மனியின் நடத்தையைக் கண்டித்துப் பிரான்ஸ் பமந்திரி சர்வதேசசங்கத்தில் எடுத்தாண்ட தீர்மானத்தினையும் அச்சங்கத்தில் நிறைவேற்றி விட்டார்கள்.

ஜெர்மனி ஆயுத ஸ்வீகாரணம் செய்ததை வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை மீறியதாகும் என்பதை யாம் மறுக்கின்றோமில்லை; ஆனால் மற்றைய வல்லரசுகள் அவ்வுடன்படிக்கைப்படி நடந்து கொண்டனவா என்று நாம் கேட்கிறோம். எனவே, தம் குற்றத்தைச் சிந்தியாது ஜெர்மனி மீது குற்றம் சுமத்துவது வல்லரசுகளின் சுயநலப்பற்றை நன்கு காட்டா நிற்கும்; விஷயம் இவ்வளவுடன் நிற்கவில்லை. ஜெர்மனிக்கும் ருஷியாவுக்கு மிடையில் இப்போது பரஸ்பரம் நேசபான்மையில்லை. இந்த நிலைமையில் பிரான்ஸ் ருஷியாவுடன் ஓர் உடன்படிக்கை செய்ததை எதைக் காட்டாநிற்கும்! எனவே இந்த உடன்படிக்கைக்குப் பின், ஜெர்மனி தனது ஆயுத ஸ்வீகாரணத்தில் அதிதீவிரமாக இறங்கியதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஜெர்மனி தனது ஆகாயப்படையையும், ஏனைய யுத்தப்படைகளையும் பெருக்குவதைக் கண்டு பிரிட்டிஷாரும் ஆயுத ஸ்வீகாரணத்தில் முழுமுரமாக இறங்கியிருக்கின்றனர். பிரிட்டிஷ் ஆகாயப் படையைப் பலமாக்குவதற்கு ஹௌஸ்டன் சீமாட்டி 2 லட்சம் பவுண் நன்கொடையளித்திருக்கிறார் என்று சென்றவாரம் வந்த றியூற்றர் தந்திச்செய்தி ஒன்று கூறுகிறது. இப்படியே வல்லரசுகள் தமது யுத்த தளவாடங்களைப் பெருக்கிக் கொண்டே போனால் இதற்கு எப்போது தான் முடிவு ஏற்படும்? அபரிமிதமாக ஆயுதபலத்தைப் பெருக்கிக் கொண்டபின் அதனைக் குறைக்க எவர்க்கும் மனம் வராது. எனவே சமாதானம் நிலவ வேண்டுமானால் வல்லரசுகள் இப்போதே ஆயுதப் பரிகாரணம் செய்ய வேண்டும். ஆயுதபலத்தை ஒவ்வொரு தேசத்திற்கும் வரையறுக்க எல்லாத் தேசங்களையு மடக்கிய மகாநாடு ஒன்று கூட்டப்படல் வேண்டும்; அதில் வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை என்ற பேச்சே வரவொண்ணாது. ஜெர்மனிக்குச் சம உரிமை என்ற அத்திவாரத்தின் மேல் அம்மகாநாட்டில் ஓர் உடன்படிக்கை ஆக்கப்படல் வேண்டும். அப்போதுதான உண்மைச் சமாதானம் ஏற்படும். அதனைவிடுத்து, வல்லரசுகள் ஒருதலை சார்ந்து, சுயநலம் கருதிப் பேசிக் கொண்டிருப்பதிற் பயனில்லை. ஐரோப்பிய இராஜ தந்திரிகள் இந்த உண்மையை உணர்வார்களா?

---

## குறிப்புக்கள்

—):×:(—.

### யாழ்ப்பாணம சுருட்டுத் தொழில்.

வீட்டிற்கு வீடு சுருட்டுக் கொட்டில்: இதுவே நமயாழ்ப்பாணத்தில் புகையிலைத் தொழில் சம்பந்தமான நிலைமையாயிருக்கிறது. ஆனால் இச்சுருட்டுக் கொட்டில்களை வைத்துச் சிங்களநாடுகளில் சுருட்டு வியாபாரம் செய்யும் நம்மவர் சுருட்டுக் கொட்டில்கள் இங்ஙனமாக அதிகரித்தும் சுருட்டின்மீதுள்ள அபிமானம் குறையக் காரணம் என்ன என்பதை ஆராய நினைக்காது கர்மம் ஆற்றுதல் உண்மையில் வருத்தத்திற்கு இடமானதே. உள்ளூர்ச் சுருட்டுக்கு எதிரிடையாக அந்நியநாட்டுப் பீடி சிகரற்றுகள் தாண்டவமாடுகின்றன என்பதை நம்மவர்கள் சிந்திக்கின்றனர் இல்லை; இவர்கள் இன்னும் சிலகாலத்திற்கு இப்படிப் பராமுகமாய் இருப்பார்களேயானால் இப்போது மிக்க க்ஷீண நிலையில் இருக்கும் சுருட்டுத் தொழில் ஈற்றில் அழிந்தொழிந்துவிடும் என்பதை எச்சரிக்கை செய்கிறோம். பழைய மாதிரியிற் சுருட்டு ஆக்குதலை விடுத்து நறுமணம் வீசத்தக்கதாய், அதிக காரம் இல்லாததாய் நன்கு எரியக் கூடியதாய்ப், புகையிலையைப் பதனிட்டுச் சுருட்டுக்களை ஆக்க நம்மவர் முயற்சி செய்யவேண்டும். இப்போது நாவிற்கும் உதட்டிற்கும் ஓர்வித கசப்பை உண்டாக்கும். "கோடா" தெளிப்பதை விடுத்து, அதற்குப்பதிலாக நிறமற்ற, வாசனையுற்ற, காரமற்ற எதும் ஒன்றைத் தயாரித்துப் புதியமுறையில் தயாரிக்கப்படும் சுருட்டுக்களுக்குத் தெளித்தால் அதிகம் நன்மைபயக்குமென்பதே எமது அபிப்பிராயமாகும். எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஜீவனோபாயத்திற்கேதுவான இச்சுருட்டுத் தொழில் மங்கி அழிந்துவிடாதபடி புதிய புதிய முறைகளைக் கையாண்டு அதனை விருத்திசெய்தல் நாட்டின் நன்மையில் கவலைகொண்ட யாவரினதும் கடமையாகும். இது விஷயமாக அறிஞர் அநுபவஸ்தர் நன்மைபயக்கும் கட்டுரைகள் எழுதி இப் பத்திரிகையில் வெளியிடுவாராக.

---

### பாராட்டுகின்றேம்.

சிங்களர் தமிழர் என்னும் இலங்கையின் பிரதான இருசாதியார்க்கிடையிலும் நிரந்தரமான ஒற்றுமை ஏற்படவேண்டின், அவ்விரு சாதியத்தாரும் பரஸ்பரம் நம்பிக்கையும் விஸ்வாசமும் கொள்ள வேண்டும். கலைகள் மூலமாக இந்த நம்பிக்கையும் விஸ்வாசமும் ஏற்படமுடியும் என்பது திண்ணம் சிங்களப் பள்ளிக்கூடங்களில் தமிழ்க்கல்வியும், தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களக் கல்வியும், ஊட்டப்படல்வேண்டும் ஆனால் அப்படியான கல்விமுறை அந்நியபால பரிபாலிக்கப்படும் எம்நாட்டில் அநுசரிக்கப்படுமோ என்பது சந்தேகமே. அரசினர் இதுவிஷயத்தில் ஊக்கம் எடுப்பார்களானால் மிகுந்த நன்மைபயக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஸ்டேஷன் றோட்டில் இருக்கும் ஆசிரியையான ஸ்ரீமதி நந்தாவதி என்னும் சிங்களப்பெண்மணி முன்மாதிரி காட்டுவதை யாம் வரவேற்கிறோம் இப்பெண்மணி தமிழ்ப்பிள்ளைகளுக்கு இலவசமாகப் பின்னேரங்களில் சிங்களம் படிப்பிக்கத்தாம் சித்தமாக இருப்பதாக இப்பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தியிருப்பதை வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேம். ஸ்ரீமதி நந்தாவதியின் செயலைப் பாராட்டுகின்றேம். அன்னவர் எடுத்திருக்கும் தேசநன்மைக்கான முயற்சிக்கு நம்மவர் தம்மாலான உதவிகளைச் செய்வாராக

---

# இலங்கைச் செய்திகள்.

### சிறைச்சாலையிற் கொண்டாட்டநாள்

இலங்கையிலேயுள்ள சிறைச்சாலைகளிற் சிறையிருப்போர் எல்லாருக்கும் சென்ற வெள்ளிவிழா நாள் வேலையில்லா விடுதலை நாளாக விடப்பட்டதாம்.

---

### பள்ளிக்குப்போக மறுத்துத் தற்கொலை செய்த சிறுவன்.

பதுளையைச்சேர்ந்த மதுலசிமாத்தோட்டத்திலுள்ள கறுப்பையா தேவர் என்னும் கண்காணியின் மகன் கந்தசாமி யென்பவன் கம்பளையிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற் சில காலம் படித்தபின் படிப்பில் வெறுப்புக் கொண்டு பிதாவின் அநுமதியின்றிப் பள்ளிக்கூடத்தை விடுத்து வந்து மூன்று மாசக் காலமாக வீட்டிலேயே இருந்தான். தன் பிள்ளையைப் படிப்பித்தல் வேண்டுமென்ற ஆவல் கொண்ட பிதா, மீண்டு பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி நயமாகப் பலமுறை சொல்லியும் அவன் கேளாமை கண்டு "சில்லறைச்" செலவிற்கு அவனுக்கு ரூபா 30 கொடுத்துப் பள்ளிக்கூடத்திற்கு மீண்டுபோகும்படி தூண்டினான் படிக்க மனமில்லாத அந்தப் "பயல்" பள்ளிக்கூடத்திற்குப் போவதற்குப் பதிலாக அயலே நின்ற ஒரு பலாமரத்தில் ஒருவரும் அறியாதபடி கயிறிட்டுத் தூங்கி இறந்து தொங்கக் காணப்பட்டானாம்.

---

### பட்டதாரிகள்

நமது அரச சக்கரவர்த்தியின் வெள்ளிவிழா கொண்டாட்ட காலத்தின் ஞாபகார்த்தமாக இலங்கை மக்களுள் 22 பேர் சமாதான நீதிவான், முதலியார், முகாந்திரம் முதலிய பட்டங்களைப் பெற்றுள்ளனர். தமிழ் மக்களுள் வட்டுக்கோட்டைக் கல்லூரித் தலைமை உபாத்தியாயராகிய மிஸ்ரர் J. V. செல்லையா சமாதான நீதிவான் பட்டத்தையும், தமிழ் வித்தியா மேற்பார்வைத் தலைவராயிருந்து இளைப்பாறியிருக்கும் நல்லூர் ஸ்ரீ. சி. கந்தையா அவர்களும், ஸ்ரீ கந்தையா முத்துக்குமாரு, தபாற்கந்தோர்த் தலைவராயிருந்து உபகாரவேதனம் பெற்றும் மிஸ்ரர் நிக்கலஸ் முத்தையாவும் ஸ்ரீ முருகப்பர் இராசையா என்னுமிவர்களும் முகாந்திரப் பட்டம் அளிக்கப்பெற்றனர்.

---

### வருமானவரி அதிகப்படல்.

இதுகாறும் மாசம் 400 ரூபா வருவாய் பெறுபவர்களே வருமான வரி இறுக்க வேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. இனிமேல் மாசம் 200 ரூபா பெறுமதியானவர்களும் வரியிறுக்க வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படலாயிற்று. இதனால் இற்றை வரையில் 10000 பேர் புதிதாக வருமான வரியிறுப்போராக, 350,000 ரூபா மேலதிகமான வரிப்பணமாகக் குறித்த வருடத்தில் அறவிடப்படுமாம். ஆனால் இந்த வரியை அறவிடும் விஷயத்தில் ஏற்படக்கூடிய செலவு 300000 ரூபா வரையில் வருமாம்.

---

### துருக்கியிற் பூகம்பம்.

200 பேர் வரையில் மாண்டனர்

துருக்கியைச் சேர்ந்த சார்ஸ் என்னும் பிரிவில் கூடிய பூகம்பம் நேர்ந்ததால் 200 பேர் வரையில் இறந்துபோக 500 பேர் வரையில் ஊறடைந்தனராம்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல 6825.

1 முருகேசையபிள்ளை சப்பி மணியம் கனகசூரியர் பெண 2 செல்வநாயகி வண்கிழக்குத் தற்போது வெள்ளவத்தை வழக்காளி.

எதிர்.

சந்திபாப்பிள்ளை அருணப்பா கரையூர் எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6825ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் அண்டுக்காணியை 1935 ஆனி ௴ 8௳ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அத்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்.

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திரிக் யாழ்ப்பாணம் டவுனைச் சேர்ந்த கரையூரில் இருக்கும் காணி "செம்பன் தறையும் செம்பான் புளியடிப் புலம்" பரப்பு நிலவிலாச்சம் 6 குளி 3ம் கல்வீடும், கிணறும், வானபயிர் செய்பயிர்களும், எல்லைகிழக்கு ஆசைப்பிள்ளையின் பெண் விசிம்தா, இராசம்மாவினதும் பங்காளர்களுடைய ஆதனமும் வடக்கு கார்த்திகேசுவின்மகன் இலட்சுமியினதும், பங்காளர் அந்தோனிப்பிள்ளை வயிரவியார் பிள்ளையினுடைய ஆதனமும் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் பெண் இராசம்மாவின் உரிமைக்காறரின் ஆதனமும் மேற்கு றோட்டு தெற்கு காலஞ்சென்ற விசென்திப்பிள்ளையின் பெண் விக்டோரியாவின் ஆதனம் இதற்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

R. Vaitheasparan Iyer,
கொம்மிஷனர்,

1935 ௵ வைகாசி௴ 1௳.
(Mis- 43 9-5-35.)

# ஜெர்மனி செய்வது சரியா? பிழையா?

## ஐரோப்பிய யுத்தத்தை ஆக்கியவர் யார்? வெர்வெயில்ஸ் உடன்படிக்கை நீதியானதா?

## கெய்ஸர் சக்கிரவர்த்தியின் சமாதானவிருப்பு பிரிட்டிஷாரின் வர்த்தக வாஞ்சை.

(ஹாஸன் மோகிதீன் அப்பாஜி)

ஜெர்மனி வெர்ஜெயில்ஸ் உடன்படிக்கையை மீறிவிட்டது. மீறித் தனது யுத்தப்படைகளைப் பெருக்கத் தொடங்கி விட்டது. இது வெர்வெயில்ஸ் உடன்படிக்கைக்குக் காரணராயிருந்த வல்லரசுகளுக்குப் பெரும் மனக்கொதிப்பை யுண்டாக்கி விட்டது. ஆனால் வெர்வெயில்ஸ் உடன்படிக்கை என்ன கொள்கையை ஆதாரமாகக் கொண்டு உண்டாக்கப்பட்டது? ஜெர்மனியே மகா யுத்தத்தை ஆரம்பித்தது. அதில் தோற்றது என்று வல்லரசுகள் உலகத்தை ஏமாற்றித் தோல்வியுற்ற ஜெர்மனியின் சுயமரியாதையைப் பங்கப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வுடன்படிக்கையை முடித்தன. நாஜிக் கட்சியினரின் தலைவரான ஹெர் ஹிட்லர் ஜெர்மனியின் சர்வாதிகாரியாய் வந்ததும், வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கை ஒருதலைசார்ந்தது, எனவே அதனை நிராகரிக்கவேண்டும் என்று கருமம் ஆற்றி வருகின்றார். ஜெர்மனிதானா மகாயுத்தத்தை ஆரம்பித்தது? அன்றேல் அதன் வல்லமையைக் கண்டு அழுக்காறுற்ற ஏனைய வல்லரசுகள் அதனை நசுக்கச் சூழ்ச்சிசெய்து யுத்தத்தை ஆரம்பித்தனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனி தன் கப்பற்படையை அதிகரிக்கத் தொடங்கியது. அகிலத்திலுள்ள ஆழிகள் யாவும் தனது சொந்தம் என இறுமாப்புக் கொண்டிருக்கும் இங்கிலாந்திற்கு ஜெர்மனியின் கடற்படை யதிகரிப்பு பேரிடியெனவாயிற்று. ஏன்? உலகத்தில் கடற்படையில் ஆதிக்கம் அதிகம் செலுத்திய ஸ்பெயின், ஹாலந்து, பிரான்ஸ் எனும் தேயங்களை முறியடித்து ஆழியில் தானே ஏகச்சக்கிராதிபத்தியம் செலுத்திவந்த இங்கிலாந்து, ஜெர்மனி தனது (இங்கிலாந்தின்) அடிமை நாடுகளைக் கைப்பற்றிவிடுமோ என்ற ஏக்கம் பிடித்தமையினாலேயே என்க.

இனி, ஜெர்மனியின் கைத்தொழிலும் வர்த்தகமும் அதிகமாக அபிவிருத்தியடைந்தன. நெப்போலியன் ஒருமுறை கூறியாங்கு, பிரிட்டிஷார் வியாபாரச்சாதியார். எனவே இவர்கள் ஜெர்மனி தமக்கு மாறுகச் சாமான்களை உற்பத்திசெய்து உலகெங்கும் பரப்பித் தமக்கெதிரிடையாய் நிற்பதை விரும்புவாரா? ஜெர்மனியை முறியடித்தாலோ என்று பிரிட்டிஷார் அங்கலாய்ப்புடன் இருந்தனர்.

இது ஒரு பக்கமாக பிரான்ஸ் தனது அயல்நாடாகிய ஜெர்மனி செல்வத்திலும், செல்வாக்கிலும் வர்த்தகம் கைத்தொழில்களிலும், கடற்படை தரைப்படைகளிலும் தீவிரமாக முன்னேறி வருவதைக்கண்டு எப்போது தருணம்வாய்க்குமெனக் காத்து நின்றது.

ஜெர்மனி யுத்தத்திற்கு அங்கலாய்த்து நின்றதா? இல்லை என்றே நிகழ்ச்சிகளைப் பாரபட்சமின்றி அவதானிக்கும் எவரும் கூறுவர். ஜெர்மன் சக்கரவர்த்தியான கெய்ஸர் வில்லியம் சமாதானப்பிரியர். யுத்தம் என்பதை அவர் அறவே வெறுப்பவர். "நாம் ஏன் யுத்தத்தை விரும்பவேண்டும். சமாதான காலத்தில் தானே நமது நாடு எல்லாவிதத்திலும் முன்னேறிவருகின்றது" என அவர் ஒருமுறை தமது பிரஜைகளுக்குக் கூறியமை ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. கெய்சர் சமாதானப்பிரியர். எனினும் தம் நாட்டிற்கு மாறாகப் பல சூழ்ச்சிகள் நடப்பதை அவர் கண்ணுறக்கண்டார், காதாரக் கேட்டார். ஆனால் அவர் மனம் கலங்கவில்லை. திப்பிரமை கொள்ளவில்லை. சமாதானத்திற்கு இன்னும் வழியுண்டு எனும் எண்ணத்துடன், அவர் தமது நாட்டின் கைத்தொழில் வர்த்தக முன்னேற்றத்திலேயே தமது சிந்தையைவிட்டார்.

1888-ம் ஆண்டில் பிஸ்மார்க் என்னும் பிரபல ஜெர்மன் இராஜதந்திரி ஐரோப்பிய யுத்தம் சம்பந்தமாகக் குறிப்பிட்ட வாக்கியங்களை கெய்சர் சக்கரவர்த்தி பொன்னேபோற் போற்றிவந்தார்.

"ருஷியர் எம்முடன் போர்தொடுப்பாராகில் பிரான்ஸ் உடனே அவர்களுடன் சேர்வர் என்பது திண்ணம். அப்படிப்பட்ட யுத்தத்தில் நம் வெற்றியுறுவோம் என நிச்சயமாய் நம்பியிருத்தல் முடியாது. அப்படியில்லை: வெற்றியுற்றாலும் நாம் எதுவ் உண்மையான பயனை அடைவோமா? லட்சக்கணக்கான நம்மவரைப் பறிகொடுப்போம். பலகோடி திரவியங்களை இழப்போம். எமது கைத்தொழில் வர்த்தகம் குன்றும். நாம் எம் பகைவரிடம் இருந்து பெறுவன எமது நட்டத்தைச் சரிப்படுத்தா. எனவே சமாதானமே யாம் என்றும் விரும்பற்பாலது."

இதுவே பிஸ்மார்க்கின் யதார்த்தமொழிகள்.

யுத்தமேகம் ஐரோப்பாவிற் குவிந்து கொண்டிருக்கையில் கெய்சர் சக்கரவர்த்தி சுகத்துக்காக நோர்வேயிலும், ஏனைய ஜெர்மன் மந்திரிகள் விடுதலைக் கொண்டாட்டத்தின் பொருட்டு ஏனைய நாடுகளிலும் நின்றனர். அவர்கள் அப்படி நிற்கும் காலத்தில் பிரான்ஸியர் ருஷியருக்குப் படையைத் திரட்டும்படி ஒன்றுக்குப் பல இரகசியக் கடிதங்கள் அனுப்பினர் என்பதற்குத் தக்க ஆதாரங்கள் உள. அக்காலம் பிரான்சிய பிரதம மந்திரியாயிருந்த பாயின்கரே ருஷியாவுக்கு விஜயம் செய்து ருஷியா யுத்தப் படை திரட்டுவதை நன்கு அறிந்து தம் தாய்த்தேசம் மீண்டார்.

பிரான்ஸ், இங்கிலாந்து, ருஷியா என்னும் மூன்று நாடுகளும் ஜெர்மனியை விழுங்கச் சமையம்பார்த்துக்கொண்டு நிற்கும் சமையத்தில் ஆஸ்திரியாவின் இளவரசரானவர் தமது மனைவியுடன் செர்பியாவிற் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது தானும், சில விஷமிகள் கூறுவது போல், ஜெர்மனியர் ஆத்திரப்படவில்லை. அக்காலத்தில ஜெர்மன் ஸ்தானிகராக ருஷியாவில் இருந்த போர்ட்டலேஸ் என்பவர் இந்த ஆஸ்திரிய—செர்பியாப் பிணக்கை ஒருவாறு சமாளிக்கவேண்டுமன்றி ஐரோப்பியப் பிரச்சினையாக்கவொண்ணாது என்று ருஷிய அரசினரைப் பன்முறை மன்றாடிக் கேட்டார். ஆனால் ருஷியா—பிரான்ஸின் பக்கப் பலம் நிச்சயமாய்க் கிடைக்கும் என்பதில் உறுதிகொண்ட ருஷியா ஜெர்மனியின் மன்றாட்டத்திற்கு இணங்கவில்லை. ஜெர்மனியை முறியடித்து ஆஸ்திரியா ஹங்கேரியை இல்லாமற் செய்வதே தமது நோக்கம் என அக்காலம் பரிஸில் ருஷிய ஸ்தானிகராகவிருந்த இஸ்வோல்ஸ்கி என்பவர் கூறியுள்ளார் எனச் சொல்லப்படுகிறது.

ருஷியா படையைத்திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்றபோதும் ஜெர்மனி சமாதானத்தையே விரும்பியது. இவ்விஷயமாக ஜெர்மன் சேனாதிபதியாகிய வொன் மொல்ற்க் என்பவர் ஆஸ்திரியாவுக்கு அனுப்பிய தந்திச்செய்தி குறிப்பிடத்தக்கது.

"ருஷியா படை திரட்டிவிட்டபோதிலும், நாம் படைதிரட்டவேண்டும் என்ற அவசியமில்லை. நாம் ஒட்டோது படைதிரட்டினால் நிச்சயமாய் யுத்தம் ஏற்பட்டே தீரும். எனவே நீவிர் ஆஸ்திரியாவுடன இப்போது போர் தொடுக்க வேண்டாம். ருஷியாவே முதலில் உம்மைத் தாக்கட்டும்."

படை திரட்டுவதில் ஜெர்மனியே கடைசியாய் நின்றது. இன்னும் மூழ்கிவிடவில்லை என்று நின்றது. ருஷியா தனது முழுப் படையையும் திரட்டிய பின்னர் ஜெர்மனி பின்வரும் எச்சரிக்கைத் தந்தியை அந்நாட்டிற்கு அனுப்பியது:

"12 மணித்தியாலங்களுக்குள் ருஷியா தனது படைதிரட்டும் தொழிலை நிறுத்தவேண்டும். பிரான்ஸும் அப்படியே செய்யவேண்டும். அன்றேல் ஜெர்மனியும் படைதிரட்டி யுத்தத்திற்காயத்தமாய் நிற்க வேண்டி ஏற்படும்."

இத் தந்திக்குக் கிடைத்த விடை திருப்திகரமற்றபடியால், தற்பாதுகாப்புக்காக ஜெர்மனி யுத்தகளத்தை நாடிற்று. எனவே, ஜெர்மனியே ஏகாதிபத்திய வெறிகொண்டு யுத்தத்தை நாடி ஏற்றில் அவலமெய்தியது என்று கூறுபவர்கள் விஷமிகளே என்பது தக்க ஆதாரங்களினால் நன்கு புலனாகின்றது.

## தற்கொலை செய்த தாயும் மகளும்.

—:*:—

### தாய் எழுதி வைத்த கடிதம்.

சென்ற வியாழக்கிழமை (2-5-35) வெளிவந்த பிரசாதத்தில் நீராவிபடியில் தாயும் மகளுமாகிய இருவர் கயிறிட்டுப் பிரேதமாகத் தொங்கக் காணப்பட்டமையைப்பற்றி வெளியிடப் பட்டிருந்தது. பிரேத விசாரணையில் இத்தற்கொலை விஷயமாகச் சில பரிதாபமான செய்திகள் வெளிப்படலாயின.

தாய் மகளென்னும் இருவருடைய பிரேதங்களும் பட்டாடைகள் தரித்தபடியும் ஆபரணம் பூண்டபடியும் விபூதி பூசியபடியும் காணப்பட்டன. மகளுடைய தலை சிகை முடித்துப் பூச் சூடியபடி காணப்பட்டது. தாயாகிய வள்ளிப்பிள்ளையின் பிரேதத்தைச் சோதித்துப் பார்த்தபோது மடியில் ஒரு கடிதம் கண்டெடுக்கப்பட்டது. அதில் தாங்கள் பாதகனைச் சேர்ந்த மரியன் கூடலில் வசித்து வந்ததாகவும் அங்குத் தன் புருஷனுடைய இனத்தவர்கள் தன்னைப் புறக்கணித்துத் தனக்குப் பெரும் அநியாயங்களெல்லாஞ் செய்ததோடு மாத்திரம் அமையாமல், மலாய் நாட்டிலிருக்கும் தன் கணவனுக்கு, தான் துர்நடை நடப்பதாகப் பொய்க் கடிதம் வரைந்தனுப்பினரென்றும் அதனைத் தன் புருஷன் மெய்யென நம்பித் தன்னைக் கடிந்து ஒரு கடிதம் எழுதி அக் கடிதத்தில் புருஷன் தன் முகத்தில் விழிப்பதில்லையெனத் தெரிவித்து விட்டாரென்றும் மானமிழந்தபின் உயிரை வைத்திருப்பானேன் என்ற நியாயத்தினால் தான் உயிரை மாய்ப்பதாகவும் கருத்துப்பட எழுதப்பட்டிருந்தது.

இந்த மனுஷிக்கு மகள் ஒரேயொருத்திதான். மகளிடத்துத் தாய் மிகவும் அன்பு பாராட்டி வந்தாள். மகளை உயிருடன் விட்டுத் தான் இறந்து போனால் மகள் பிற்காலத்தில் அந்தரித்துக் கஷ்டப்படுவாளென்ற காரணத்தினால் முதல் மகளின்

> **சரஸ்வதி**
> **கடத்தப்பட்ட வழக்கு**
> **4-ம் பக்கம்.**

(சரஸ்வதி கடத்தப்பட்ட வழக்கு 4-ம் பக்கம்.)

உயிரை நீங்கச் செய்து பின் தன்னுயிரை மாய்த்தாளென்றே விசாரணையில் அதிகாரிகள் யூகித்துள்ளனர். ஆண்மக்கள் மூவருள் 14 வயசுப் பிராயமுள்ள இராமலிங்கமென்னுஞ் சிறுவன் விசாரணையிற் சொன்னவை:

"என் தாயும் என் தங்கையும் தம்பிமார் இருவரும் நானுந்தான் இந்த வீட்டிற் குடியிருக்கிறோம். புதன்கிழமை எங்கள் தகப்பன் மலாய் நாட்டிலிருந்து எழுதிய கடிதம் கிடைத்தது. அவர் மாசத்திற்கு ஒருமுறை இரண்டுமுறை எங்களுக்குக் கடிதம் எழுதுவார். கடைசியாக வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தபின் எங்கள் தாய் பெரிதுங் கவலையோடு காணப்பட்டாள். இந்தக் கடிதத்தையும் இதற்கு முன் வந்த கடிதங்களையும் அம்மா நேற்று எடுத்து நெருப்பிலிட்டுச் சுட்டு விட்டாள். இதற்கு முந்தி அப்பர் எழுதுங் கடிதங்களைப் படித்துப் பார்க்கும்படி அம்மா எங்களிடம் தருவதுண்டு. ஆனால் இறுதியாக வந்த கடிதத்தை மாத்திரம் நாங்கள் படித்துப்பார்க்கும்படி தராமல் தவிர்த்துவிட்டாள். இதற்கு முந்தி நான் வெளி விறாந்தையிற்றான் படுத்திருப்பது; போன இரவு மாத்திரம் என்னை அறையுட் படுக்கும்படி அம்மா சொல்ல நான் அப்படியே செய்தேன். அம்மாவும் தங்கைச்சியும் தம்பிமாரும் வெளி விறாந்தையிலேயே அன்றிரவு படுத்துறங்கினர். விடியற்புறம் நான் விழித்த பொழுது என் தம்பி கணபதிப்பிள்ளை "அண்ணே! அண்ணே!! தங்கைச்சி இராத்திரிக் கத்தக் கேட்டேன்" என்று எனக்குச் சொன்னான் நான் ஓடிப்போய் அம்மாவை எங்குந் தேடிப் பார்த்தபோது, ஐயோ! என்னைப் பெற்றவள் வெளியே சவமாய்த் தொங்கக் கண்டேன். தங்கைச்சி எங்கேயென்று தேடினேன். அடுக்களையிலுள்ள வளையில் மாட்டிய கயிற்றில் மாட்டித் தூங்கச் செய்து கொன்றுவிட்டுத்தான், அம்மா தான் தூங்கி உயிர் விட்டிருக்க வேண்டும் தங்கைச்சியில் அம்மாவுக்கு அதிகம் அன்பு. தங்கைச்சிக்கு ஒரு மோசம் வந்தால் தானும் உயிர் விடுவேன் என்று எங்கள் தாய் பலமுறையுஞ் சொல்லியிருக்கிறாள்"

அதன்பின் மற்றைப் பிள்ளைகளாகிய 8 வயசுப் பிராயமுள்ள கணபதிப்பிள்ளை,

(தொடர்ச்சி 5 ம் பக்கம்)

## கடிதம்.

—:o:—

### புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கப் பத்தாமாண்டு நிறைவுவிழா.

மேற்படி சங்கத்தின் பத்தாமாண்டு நிறைவு விழா யுவ ஆண்டு சித்திரைத்திங்கள் ௬-ம், ௭-ம், ௮-ம் (19, 20, 21-4-35) நாட்களில் நடந்தேறியது.

முதலாம் நாட் காலை எட்டுமணியளவில் ஸ்ரீகணேச மூர்த்திக்கு அபிடேகம் பூசையாதியன நடாத்தப்பட்டன. பின் சாயந்தரம் இரண்டு மணியளவில் நடாத்தவேண்டியிருந்த வருடாந்த மகாசபை கொழும்புக் கணக்கு வாராமை காரணமாகப் பின்போடப்பட்டது. இரவு ஏழுமணியளவில் பிரபல நியாயதுரந்தரர் ஸ்ரீமாக் வை. துரைசுவாமி B A. அவர்களின் அவைத் தலைமையின்கீழ் தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயதும் சங்க அக்கிராசனர் ஸ்ரீமாக் க. செல்வத்துரை ஆசிரியர் அவர்களால் வரவேற்பும் ஸ்ரீமாக் சி. கணபதிப்பிள்ளை வைத்தியர் அவர்களால் விஷயத்தை ஒட்டிய பொழிப்பும் கூறப்பட்டன. பின்னர் தலைவர் அவர்கள் முகவுரை கூறியதும் "வீரகேசரி"ப் பத்திராதிபர் ஸ்ரீமாக் H. நெல்லையா B. A. அவர்கள் 'இன்றைய உலகும்வாலிபர்கடனும்' என்னும்விஷயமாக பின் அவைத்தலைவரின் நிறைவுரையோடும் காரியதரிசியின் வரவேற்போடும் முதலாம் நாள் இரவு விழா பதினொரு மணியளவில் தேவாரபாராயணத்துடன் நிறைவெய்தியது.

இரண்டாம் நாட் காலை ஒன்பது மணியளவில் புங்குடுதீவு ஸ்ரீமாக். வே. சிவப்பிரகாசம் அவர்கள் அவைத் தலைமையின்கீழ் தீவுப்பகுதி வித்தியாசாலை மாணவர்களின் உபந்நியாசப்போட்டியும் பழைய மாணவர் உபந்நியாசப்போட்டியும் ஆரம்பமாயின. வெற்றிபெற்ற மாணவர்களுக்குத் தலைவர் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன. பின் ஸ்ரீமாக் க. நாகலிங்கம் ஆசிரியர் அவர்களால் சபைக்கு வரவேற்புக் கூறப்பட்டது. அதன்பின்னர் பன்னிரண்டு மணியளவில் "போர்த் தேங்காய்ப் பங்கம்" நடந்தேறியது மாலை ஆறரை மணியளவில் சிதம்பரம் பிரம்மஸ்ரீ இலட்சுமண ஐயர் அவர்களின் பிரதம சிடர் ஸ்ரீமாக் அ. இராசப்பிள்ளை அவர்கள் "வள்ளி திருமணம்" என்னும் விடயத்தை பக்கவாத்தியசகிதமாய்ப் பிரசங்கம் செய்தனர்.

மூன்றும் நாட் பகல் பத்துமணியளவில் உயரப்புலம் முற்றவெளியில் எல்லா வித்தியாசாலை மாணவர்களும் தாச்சி விளையாடினர். அதில் ஸ்ரீகணேச வித்தியாசாலை வெற்றிபெற்றது. பின்னர் எல்லா வித்தியாசாலை மாணவர்களும் ஸ்ரீகணேசவித்தியாசாலை மண்டபத்தையடைந்ததும் அவர்களுள் தேற்சிபெற்ற பலரால் சங்கீத காலட்சேபம் நடைபெற்றது 1 மணியளவில்எல்லா வித்தியாசாலை மாணவர்க்கும் பிறர்க்கும் ஸ்ரீமான்கள் ஐ. நல்லதம்பி அவர்களாலும் க. மு. முத்துவேலு அவர்களின் பிரியபத்தினியான ஸ்ரீமதி தையல்நாயகிப்பிள்ளை அவர்களாலும் விருந்தினிதளிக்கப்பட்டது. பின்னர் இரண்டு மணியளவில் உயரப்புலம் முற்றவெளியில் எல்லா வித்தியாசாலை மாணவர்களும் பந்தய ஆட்டத்தில் பங்கு பெற்றனர். ஆட்டம் ஆறுமணியளவில் நிறைவெய்தியது. அவ்வமையம் அவைத் தலைவராயிருந்த வடபெரும்பாக வித்தியாதரிசி ஸ்ரீமாக் K. S. அருள்நந்தி M Sc. அவர்களால் "விளையாட்டின் நலன்கள்" பற்றிய விரிவுரை நடாத்தப் பட்டது. மாலை ஏழு மணியளவில் மூன்றும் நாள் பூர்த்திவிழா முடிவெய்தியது.

இரண்டாம் நாள் பின்போடப்பட்ட வருடாந்த மகாசபை (24-4-35 புதன்கிழமை மாலை ஏழு மணியளவில் ஸ்ரீகணேச வித்தியாசாலை மண்டபத்தில் சங்க அக்கிராசனரின் அவைத்தலைமையின்கீழ் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது அவ்வமையம் காரியதரிசியால் சென்ற மகா சபைக் குறிப்பும் அறிக்கையும் படித்தபின் சபையாரால் அங்கீகரிக்கப்பட்டன. பின் தனாதிகாரி வாராமையால் அவரது பொறுப்பைக் காரியதரிசியேற்று வரவு செலவுக் கணக்கை வாசித்துக்காட்டினர் பின் கொழும்புக் காரியதரிசியால் அனுப்பப்பட்ட காகிதம் ஆலோசனைக்கெடுக்கப்பட்டது. பின் ஸ்ரீமாக் சி. இ. சதாசிவம்பிள்ளை ஆசிரியரவர்கள் கொடுத்த 3 வினுக்களுக்கு விடை யிறுக்கும் மாதிரி ஆலோசிக்கப்பட்டது. பின் இளைஞர் கழகக் காரியதரிசியால் விடுத்த காகிதம் பற்றிய விவாதம் நடைபெற்றது. புதிய ஆண்டிற்குரிய உறுப்பினர் தெரியப்பட்டனர்.

# தலையசிங்கத்தின் தோற்றம் — சரஸ்வதிமீது கண்நோக்கமா?

## கொண்ட மனைவியை வீட்டில் வைத்து கூத்தி வைக்க ஆசைகொண்டாரா?

## உத்தியோககார மாப்பிள்ளைவேண்டுமென்று அவா! உண்மை தெரியாது பின் அகப்பட்ட விதம்.

நல்லூரிலே சின்னம்மா என்னும் பெண்ணை ஏமாற்றி, அவளது மகள் சிப சரஸ்வதி என்னும் மங்கைக்கு ஒழுங்கையில் தாலி கட்டினர் என்றும் அதற்குத் துணையாக நின்றனர் என்றும்,

1. கந்தையா,
2. கனகரத்தினம்,
3. சதாசிவம்,
4. குமாரசுவாமி,
5. சபாரத்தினம்,
6. சுப்பையா

என்னும் இவர்கட்கு மாறுகத் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி ஸ்ரீ K. ஆழ்வாப்பிள்ளை அவர்களது முன்னிலையிற் சென்ற செவ்வாய்க்கிழமை (7-5-35) மீட்டும் விசாரணை செய்யப்பட்டது.

கல்சமுவாவில் ஓவசியராயுள்ள ஸ்ரீ தலையசிங்கம் என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமை விசாரணை செய்யப்பட்டார். அவர் பொலிஸ் பரிசோதகர் மிஸ்ரர் J. H. A பர்ணாந்துவினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது கூறிய சாட்சியம் வருமாறு—

"எனது வயது 30. எனக்கு 1ம் எதிரியாகிய கந்தையாவைச் சென்ற 6, 7 வருஷகாலமாகத் தெரியும். இந்தக் கலியாண விஷயமாக 1-ம் எதிரி எனக்கு ஓர் கடிதம் எழுதியது ஞாபகமிருக்கிறது. நல்லூரில் சரஸ்வதி என்னும் பெண் இருக்கிறாள் என்றும் யாரேனும் ஒரு உத்தியோகத்தரையே அவளுக்கு மணமுடித்துக்கொடுக்க அவளின் தாயும் சுற்றத்தவர்களும் விருப்பமாயிருக்கிறார்கள் என்றும், குமாரசுவாமி (4-ம் எதிரி) யும் இதவிஷயத்திற் சிரத்தை எடுக்கிறார் என்றும் அக்கடிதத்திற் குறிப்பிடப்பட்டிருந்தன. யான் அக்கடிதத்திற்கு மறுமொழி அனுப்பினேன். யான் முன்னமே ஓர் விவாகம் செய்து மனைவியுடன் இருப்பதால் மறுவிவாகம் செய்ய எனக்கு விருப்பமில்லை என்றும், அன்றியும் இப்பெண்ணை மணக்கக்கூடியதாய் என் இனத்தவர்க்கிடையிலும் வாலிபர் இல்லையென்றும் அக்கடிதத்தில் எழுதினேன். இதற்கு கந்தையா, நன்றிபறிதல் கூறி ஓர் கடிதம் எழுதியனுப்பினார். பங்குனி மாதம் 6-ம் தேதி நான் கலசமுவாவில் இருந்தேன். நான் எவ்வகையான சட்டிறுதிக்கும் கையொப்பமிடவில்லை.

### மிஸ்ரர் H. R. அரியகுட்டியின் குறுக்கு விசாரணையின்போது சாட்சி கூறியன:

"என்னுடைய மனைவி இப்போதும் இங்கேதான் இருக்கிறாள். நான் சரஸ்வதியை வைப்பாட்டியாக வைத்திருக்கவேண்டும் என்றும் எண்ணம் வைத்திருக்கவில்லை.

மிஸ்ரர் அரியகுட்டி: அப்படியாயின் நீர் ஏன் கடிதங்கள் கந்தையா முதலியோர்க்கு எழுதினீர்?—நல்லவனுப் பார்த்து எவர்க்கும் ஒருவர்க்கு இச்சம்பந்தத்தைச் செய்யலாம் என்ற நோக்கம் கொண்டே நான் கடிதம் எழுதினேன்.

இதவிஷயமாக நீர் சரஸ்வதிக்காவது தாய்க்காவது கடிதம் எழுதியதுண்டா?—இல்லை.

### நாலாவது எதிரி குமாரசுவாமி தலையசிங்கத்தைக் குறுக்குவிசாரணை செய்ததாவது:

நீர் எனக்கு ஓர் கடிதமாவது எழுதவில்லையோ?—இல்லை.

உம்மால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று இதோ இருக்கிறது. இது எனக்கு எவ்வாறு கிடைத்தது?—நீரும் கந்தையாவும் சேர்ந்து எழுதிய கடிதத்தில் உம்முடைய மேல்விலாசத்திற்கு விடை அனுப்பும்படி எழுதப்படியாலதான் உமது விலாசத்திற்கு எழுதினேன்.

### மிஸ்ரர் T. C. இராசரத்தினத்தின் குறுக்கு விசாரணையிற் சாட்சி கூறியன.

"குமாரசுவாமி எனக்குக் கடிதம் எழுதவில்லை. குமாரசுவாமியும் கந்தையாவும் சேர்ந்தே எழுதினர். குமாரசுவாமிதான் கடிதம் எழுதினவர் என்பது எனக்குத் தெரியாது.

ஸ்ரீ இராஜரத்தினம்: இங்கே பார்! நீதான் இந்த திருவிளையாடலைத் தொடக்கியவன்?—(மறுமொழி இல்லை)

இந்த 1-ம் எதிரியை ஓர் கையாளாக வைத்துக் கொண்டு, அவன் மூலமாக இந்தப் பெண்ணைக் கொப்பி அவளை நீ வைப்பாட்டியாய் வைத்திருக்க எத்தனங்கள் செய்தாயல்லவா? —ஒருபோதும் இல்லை.

பொய் சொல்லாதே?—நான் பொய்சொல்லவில்லை.

### கந்தர் இளையவியின் சாட்சியம்.

"என் வயது 75; இருப்பிடம் கோப்பாய். பிறக்ற் குமாரசுவாமியை எனக்குத் தெரியும். ...உம் அத்தரும்படி அவரிடம் காசுகொடுத்திருந்தேன். அவர் சட்டுக்குள் காசு எடுக்க விரும்பும் ஒரு பகுதியாரின் உறுதியைக்காட்ட, நான் அந்த இடத்திற்குச் சென்று ஆவும் பார்த்தேன். பார்த்தது எனக்குத் திருப்தியாக விருக்கபடியால் அதற்குக் காசு கொடுக்கும்படி பிறக்றருக்குச் சொன்னேன். உறுதியை எனது மனைபேருக்கு முடிக்கும்படி கூறினேன். நான் பணங்கொடுத்தது பங்குனி 2ம் தேதி. சொற்ப காட்களின் பின் உறுதி எழுதப்பட்டது".

இத்துடன் சென்ற செவ்வாய்க்கிழமையின் விசாரணை முற்றுப்பெற்றது. 2ம் 4ம், 5ம் எதிரிகளைத் தனித்தனி 300 ரூபாய் பிணையிலும் 3ம், 6ம் எதிரிகளைத் தனித்தனி 200 ரூபாய் பிணையிலும் போகும்படி நீதிபதி உத்தரவிட்டு வழக்கை 21ம் தேதிக்குத் தவணையிட்டார்.

---

### நாகம்மா கடத்தப்பட்டாள்.

— o —

கொக்குவிலில் சிங்களவரின் அமளியம்

—:o:—

வழக்குத் தவணையிடப்பட்டது.

கொக்குவிலைச் சேர்ந்த சந்தையா என்பவரின் மகள் நாகம்மாவை, தைமன் சில்வோ என்னும் சிங்களவனும் இன்னோர் சிங்கள வாலிபனுமாகச் சேர்ந்து அவளின் பெற்றோர் பாதுகாப்பிலிருந்து சில தினங்களுக்குமுன் பலவந்தமாகக் கடத்திச் சென்றனர் என்று அறிகிறோம். இரு சிங்களவரும் பிணையில் விடப்பட்டிருக்கின்றனர். வழக்கு 12-5-35ற்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

### துவிச்சக்கரவண்டியிற் கன்னிகையின் பவனி.

சென்றவாரத்தொருநாள் இரவு வண்ணார்பண்ணைத் தட்டாதெரு வழியாக ஒருவன் தனது துவிச்சக்கரத்துப் பின்னாசனத்தில் ஓர் இளம்மங்கையைக் கொக்குவிற் பக்கத்திலிருந்து கொண்டு சந்தேகிக்கத்தக்க விதமாய்ப் போவதைச் சிலர் கண்டார்கள் என்றும், அவர்கள் அவ்விருவரையும் மறித்துச் சில நேரத்தின்பின் விட்டுவிட்டார்கள் என்றும் அறிகிறோம்.

---


### திருநெல்வேலி சைவாசிரியகலாசாலை பிரவேசபரீக்ஷை 1935.

புதிய ஒழுங்கின்படி 1935ம் ஆண்டு புரட்டாதி மாசம் தொடங்கி தமிழ்ப்பிரிவு பரீக்ஷையிற் சித்தியடைந்தவர்கள் மூன்று வருஷமும், தமிழ் ஆசிரிய தராதர பத்திரம் பெற்றவர்களும் ஆங்கிலத்தில் சீனியர், மற்றிக்குலேஷன் பிரிவுப் பரீக்ஷைகளில் ஒன்றிலாவது இவற்றிற்கு மேற்பரீக்ஷை யிலொன்றிலாவது தமிழை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்தவர்களும் இரண்டு வருஷமும் இக்கலாசாலையிற் பயிற்றப்படுவார்கள். இவ்வருஷம் எவ்வித சட்டணப்பணமுமின்றி சேர்முகப் பரீக்ஷை மாத்திரம் நடத்தப்படும். அப்பரீக்ஷையின் பெறுபேற்றைக் கொண்டே ஆசிரியமாணவர்கள் தெரியப்படுவார்கள். விண்ணப்பப்பத்திரங்கள் ஜூன்மாசம் 15ம் தேதிக்குமுன் அனுப்பப்படவேண்டும்.

சைவாசிரியகலாசாலை,
திருநெல்வேலி,
30-4-35

சி. சுவாமிநாதன்,
அதிபர்.

(Mis. 44. 9-5 35.)

---

### தமிழாசிரிய தராதர பத்திரவகுப்பும் [Ceylon Teachers Certificate Class] சிரேட்ட பாடசாலைத்தராதரபத்திரவகுப்பும் [Tamil S S. C. Class.] 1935.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை ஆதரவின் கீழ் மேற்படி வகுப்புக்கள் ஆண் பெண் இருபாலாருக்கும் 1935ம் ஆண்டு மே மாதம் ...ம் தேதி தொடங்கி நடத்தப்படும். இவ்வகுப்புகளிற் சேரும் பெண்களுக்குப் பிரத்தியேகமான விடுதி வசதிகள் தக்க மேற்பார்வையின்கீழ் ஒழுங்கு பண்ணப்படும். 1935ம் வருஷ ஆசிரிய தராதரபத்திர பரீக்ஷை எடுக்க விரும்புவோர் மே மாதமுடிய முன்னும், ஏனையோர் செப்டெம்பர் மாதம் வரையும் வகுப்புக்களிற் சேரலாம். விடுதியிற் சேராதிருக்கும் பெண்கள் வகுப்புக்களிற் சேரமுன் விடுதி வசதிகளைப்பற்றி எம்மிடம் அறிந்துகொள்ளவேண்டும்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழாசிரிய தராதர பத்திர வகுப்பாருக்குக் கல்வியிற்றுறைப் பாடத்தில் விசேஷ உபந்நியாசம் நடைபெறும். இவ்வுபந்நியாசங் கேட்க மேற்படி வகுப்பாரல்லாத பிறருக்கும் உத்தரவளிக்கப்படும்.

சைவாசிரியகலாசாலை
திருநெல்வேலி
30 - 4 - 35.

சி. சுவாமிநாதன்
அதிபர்.

(Mis. 44. 9 5-35)

கோடைகாலத்திற் பிடிக்கும் தலைவலியைத் தடுப்பதற்காக ஒரு போத்தல்

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் தைலத்தை

வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.

Y 6 1-4-34—31-12-35

---

காலத்துக்குத்தக்க மலிவு விலை!

## மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்மெண்ட், முனிசிப்பல் கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

க. சே. த. சே. செல்லையாபிள்ளை,
316ம் நி-ர் கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜென்றுமாராய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளையும் கச்சேரியடி கிழக்கு, கனகரத்தினம்றோட்டு, போ. தம்புவும் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

(Y 41. 21-5-34 to 20-5-35.)

---

### திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒரு பங்கு 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசிய நடிமங்களை வளர்ப்பதால் சுபேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைபாட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 137. 1 11-34 to 31-10 35.) வி.

---

# தாயும் பிள்ளையும்.

ச. இராசரத்தினம் எழுதியது.

இலங்கை வைத்தியக் கல்லூரி மருத்துவ ஆசிரியரும், கொழும்பு பிரசவ வைத்தியசாலைப் பிரதம வைத்தியருமாகிய Dr. S. L. நவரத்தினம் அவர்கள் எழுதிய முகவுரையைக் கொண்டது. "வீரகேசரி", 'சோதிடபரிபாலினி", 'வர்த்தக ஊழியன்' முதலிய பிரபல பத்திரிகைகளின் மதிப்புரைகளைப் பெற்றது.

1. ".........பெண்மக்கள் கர்ப்பமாயிருக்கும் காலத்திலும், பிரசவ காலத்திலும், பின்னரும் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், இன்னோரன்ன அரிய விஷயங்களையும் நுட்பமாகஎடுத்து விளக்குவது: தமிழில் முதன் முதல் இவ்விஷயமாக வெளிவந்ததால் இதுவே யாகும்." இந்துசாதனம்.

2: ".........ஒவ்வொரு குடும்பத்திலும் கைவசமிருக்கவேண்டியது அவசியமாகும்" ஈழகேசரி. விலைசதம் 50.

கிடைக்குமிடங்களுட் சில.

(1) சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
(2) சண்முகநாதன் புத்தகசாலை, „ „
(3) Leela Stores 249, Norris Road, Colombo.
(4) Naveena Katha Book Depot, Montgomery Street, Rangoon.
(5) Messrs. Seenicutty and Co Treacher Street, Ipoh.

(Mis. 212. 21-3 to 20-5-35.) (சி)

## உள்ளூர்ச் செய்திகள்.

—:§:—

### அச்சுவேலி வடக்குக் கலாசங்கம்.

அச்சுவேலி வடக்குக் கலா சங்கத்தின் 7ம் மாதாந்தப் பொதுக்கூட்டம் யுவவருஷம் சித்திரை௴ 21ம் தேதி (4-5-35) சனிக்கிழமை பிற்பகல் 7மணியளவில் திரு த. தம்பிமுத்து உபாத்தியாயரவர்களின் தலைமையின்கீழ், இடைக்காட்டுப் புவனேஸ்வரி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. முற்கூட்ட வரலாறு வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'கலாபூஷணம்' என்னும் பத்திரிகை பத்திராதிபரால் வாசிக்கப்பட்டது. 'கிராம வாழ்க்கையும் அரசியல் ஞானமும்' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு திரு ச. வீரசிங்கம் உபாத்தியாயரவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் பண்டிதர் சு. இராமசாமியவர்களால் குறிப்புரைகள் கூறப்பட்டன. தலைவரவர்களின் முடிவுரையுடன் கூட்டம் பிற்பகல் 9 மணியளவில் இனிது நிறைவேறியது.

—

### துவிசக்கரத்தை அபகரித்தவர் பிடிபட்டனர்.

சென்ற திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பெரியகடை E. A. பாய் கடையில் உள்ள சம்பந்தர் என்னும் வலிபன் 5903 இலக்கமிட்ட துவிசக்கரத்தை யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் ஓரிடத்திற் சாத்திவிட்டு, தனது அலுவல்களை முடித்துப் பின்வந்து பார்த்தபோது துவிசக்கரத்தைக்காணவில்லை. உடனே அவர் விஷயத்தைப் பொலிசார்க்கு அறிவித்தார் பொலிசார் விசாரணைசெய்து துவிச்சக்கரத்தைக் கண்டுபிடித்து நடராசா என்னும் ஒருவரையும் இன்னேர் அச்சுவேலி வாசியையும் சிறைப்படுத்தினர்.

—

### விவாகநீக்க வழக்கு.

பிறக்டர் செல்வத்துரை வ்ரோறரின் மனைவியான உரும்பிராய் தேவகியம்மாள், தமது கணவன் தம்மைக் குரூரமாக நடாத்திவருவதால், தமக்கும் தம் கணவனுக்கு மிடையேயுள்ள விவாகத் தொடர்பை நீக்கிவிடவேண்டுமென்று தொடர்ந்த வழக்கு சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் தவணையிடப்பட்டது. வாதிக்காக ஸ்ரீ R R, நல்லையாவும், பிரதிவாதிக்காக நியாயவாதி மிஸ்ரர் V. ஜோசப்பும், மிஸ்ரர் S. A சபாபதியும் ஏற்பட்டனர்.

—

### விருந்து கொண்டுபோனவனை அடித்தது.

மானிப்பாயில் வசிக்கும் உபகாரவேதனம் பெறும் டிஸ்திறிக் என்ஜினியராகிய ஸ்ரீ S. M. S இராசசூரியர் தம்மை விருந்திற் பிடிக்கும்படி வந்த முருகேசு வீரவசிங்கம் என்னும் "பிஸ்க்கால்" சேவகனை, முகத்திற் புடைத்து அச் சேவகன் தன் கடமையைச்செய்யாதபடி தடுத்தாரெனவும், அவருடைய மனைவி, மகன் மகள் ஆகிய மூவரும் அவருக்குத் துணையாக நின்று தவறுசெய்தார்களென்றும் யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டிற் குற்றஞ்சாட்டப்பெற்றுள்ளனர்.

—

### வேளாளன் வீட்டில் சாப்பிட மறுத்த தச்சனின் கதி.

சிறு விளானைச்சேர்ந்த ஆறுமுகம் என்னும் தச்சன் அவ்வூரில் உள்ள வேளாளன் வீட்டின் மரணசௌசவேலையில் சாப்பிட மறுத்தமையினால், சிலரால் நையப்புடைத்து விளாவெளிச் செய்பாட்டில் ஒருவர் துணையுமின்றித் தனியே போடப்பட்டானும். இப்போது அவன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலைமையில் இருக்கிறன் என்று அறிகிறேம். இவ்வக்கிரமம் பொன்னம்பலம் என்பவராலும் அவரோடு சேர்ந்தவர்களாலும் செய்யப்பட்டதெனச் சொல்லப்படுகிறது.

—

### வீட்டிற்கு நெருப்பு வைத்ததாக.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சரவணை, முத்தன், செல்லன், மாணிக்கன், நாகன் என்னும் ஐவர், அவ்வூர் மூ. நாகன் என்பவனுடைய வீட்டுக்கு நெருப்பு வைத்தார்கள் என யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் ஸ்ரீ K. அல்வாப்பிள்ளை முன்னிலையில் சென்ற செவ்வாய்க்கிழமை குற்றம் சாட்டப்பட்டனர். ஸ்ரீ R. R நல்லையா வழக்கை நடாத்தினர். எதிரிகளுக்காக ஸ்ரீ T. C. இராசரத்தினம் ஏற்பட்டனர். விசாரணை முடிவில் எதிரிகள் நிரபராதி எனக் கண்டு விடுதலை செய்யப்பட்டனர்.

## இந்திய அரசியற் குறிப்புக்கள்.

—:0:—

### தேசியக் காங்கிரஸ் வெற்றி.

பசி - கோரக்பூர் தொகுதிக்கு நடக்கவிருக்கும் உபதேர்தலில் காங்கிரஸ் தேசியக் கட்சியின் சார்பாகப் பண்டிதர் கிருஷ்ணகாந்த மாளவியாவும், காங்கிரஸ் சார்பாக ஸ்ரீமதி உமாநேருவும் அபேட்சகராய் நின்றனர். ஆனால் இரு கட்சியினருக்கும் இடையில் நிகழ்ந்த சமரசப்பேச்சுக் காரணமாக ஸ்ரீமதி உமாநேரு தேர்தலினின்றும் விலகிவிட்டார். எனவே பண்டிதர் கிருஷ்ணகாந்த மாளவியா அவர்களே அத் தொகுதிக்குப் போட்டியின்றித் தெரிந்தெடுக்கப் பட்டார் பண்டிதர் கிருஷ்ணகாந்த மாளவியா, பண்டிதர் மதன்மோகன் மாளவியாவின் மகனுவர். தேசியப் போராட்டம் சம்பந்தமாகப் பன்முறை காராக்கிருகம் புக்கவர். இந்தியச் சட்டசபையில், அவர் ஓர் பெரும் வீரசிகாமணியாய்த் திகழ்வர் என்பதற் ஐயமின்று.

—

### பெரும் அநியாயம்.

வங்கச் சிங்கமாம் ஸ்ரீஜுத் சரத் சந்திரபோஸ் அவர்கள் இந்தியச் சட்டசபைக்கு வங்காளத்துப் பிரதிநிதிகளில் ஒருவராய் ஏகோபித்து அனுப்பப்பட்டும் அவர் தமது கடமைகளைச் செய்வதற்கு அரசினர் அநுமதி கொடுக்க மறுத்து மறியற் கூடத்திலேயே வைத்திருந்தனர். அவரை விடுதலை செய்யவேண்டும் என இந்தியச் சட்டசபை செய்த நிர்மானமும் அவலமாயது. தாம் சிறைக்குள் இருப்பதால், சட்டசபையில் காங்கிரசிற்கு ஓர் வாக்குச் சம்மதம் இல்லாமற் போகிறது. தமக்குப்பதிலாக இன்னெருவர் தெரிவுசெய்து அனுப்பப் படுவாராயுனல் அவர் காங்கிரசிற்குத் தமது வாக்குச் சம்மதத்தை யளிப்பார் என்று ஸ்ரீஜுத் போஸ், இப்போது தம் அங்கத்தினர் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டார் அரசினரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது ஜூன்மாதம் 29-ம் தேதிக்குமுன்னல் அந்த ஸ்தானத்திற்கு உபதேர்தல் நடைபெறும். ஜனங்களால் தெரிவு செய்தனுப்பப்பட்ட ஓர் பிரதிநிதி தமது கடமையைச் செய்வதை இந்திய அரசினர் அநியாயமாகத் தடுத்தனர். ஆனல் ஸ்ரீஜுத் போஸிலும் பார்க்க தீவிர தேசியவாதி ஒருவரை வங்கத்து வீரர் அனுப்பப் போகின்றனரே! அப்போது இந்திய அரசினர் என்செய்வர்?

—

### இன்னும் உயிர் கொடுப்பதா?

சென்னைச் சட்டசபை பொதுஜனங்களின் நம்பிக்கையைப் பெற்றதல்ல என்பது, சென்னைமாகாணத்தில் சென்றபல நாட்களாக நடந்த 4 உபதேர்தல்களில் ஜஸ்டிஸ்கட்சியினர் காங்கிரஸ் கட்சியினரால் முறியடிக்கப்பட்டதிலிருந்து நன்கு விளங்கும். மந்திரிசபை பொதுஜன அபிப்பிராயத்திற்குப் பொறுப்பற்றதாயிருப்பதனல் சட்டசபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடாத்தவேண்டுமென்ற கிளர்ச்சி இப்போது பலமாகச் சென்னையெங்கும் இருக்கிறது. ஆனல் பிரிட்டிஷ் அரசினர் பொதுஜன அபிப்பிராயத்திற்கு இணங்குவதாகத் தெரியவில்லை. நவம்பர் மாதத்துடன் முறைப்படி கலைக்கவேண்டிய சட்டசபைக்குப் பின்னும் 6 மாத நீடிப்புக் கொடுத்திருக்கின்றனர் என்று ஓர் தந்திச் செய்தி கூறுகிறது. அப்பாடி! பொப்பிலி இராஜா போன்ற ஜஸ்டிஸ் பிரமுகர் இன்னும் கொஞ்சக் காலத்திற்குக் காங்கிரசிற் கஞ்சாது நிம்மதியாகக் காலம் கழிக்கலாம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

6 வயசுப் பிராயமுள்ள கதிர்காமன் இருவரும் நாங்கள் அறிந்ததைச் சொன்னர்கள்.

பிரேத விசாரணை செய்த ஸ்ரீ சி. ஐயம்பிள்ளை உடையார் இவர்கள் சுருக்கிட்டுத் தூங்கியமையினுல் மரணமடைந்தனரெனத் தம் அபிப்பிராயத்தைக் கூறியுள்ளார். தன் புருஷனுடைய இனத்தவர் செய்த இம்சைகளைச் சகிக்க முடியாமலே இம் மனைவி பிள்ளைகளோடு, தன் சகோதரியிருக்குமிடமாகிய நீராவியடிக்குச் சில வாரங்கட்கு முன் வந்து அங்கே ஒரு வீட்டினைக் குத்தகைக்கு எடுத்துக் குடியிருந்ததாகவும், புருஷனுடைய இறுதிக்கடமை அங்கிருக்குபோது கிடைத்தமையினுற்றான் இப்படி உயிர்விட நேர்ந்ததென்றும் "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" யென்றபடியே இந்தச் செயற்கருஞ் செய்கைகளை இவ்வுத்தமி செய்தாளென்றுஞ் சொல்லப்படுகிறது.

## உலக அரசியற் குறிப்புக்கள்.

(அரசியல்வாதி,)

ஜெர்மனி—இற்றைக்கு 3 ஆண்டுகளுக்கு முன் மிகவும் பிற்போக்கடைந்திருந்த ஜெர்மனி—இப்போது ஏனைய வல்லரசுகளுடன் எல்லா விஷயத்திலும் சமத்துவம் பாராட்ட முன்வந்துவிட்டது. "உலகத்தில் உள்ள எந்தத் தேசத்தையும் எதிர்ப்பதற்குத் தக்க ஆகாயப்படையை நாம் அதிகப்படுத்திக்கொண்டு வருகிறேம். அந்தப்பொறுப்பை ஹிட்லர் என்னிடம் தான் ஒப்புவித்திருக்கிறார். நானே எந்த வேலையையும் அரை குறையிற் செய்வது கிடையாது. சரித்திரத்திலேயே இதுகாறும் கேட்டிருக்க முடியாத திறமான முறையில் எமது ஆகாயவிமானப்படை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. எமது ஆகாயப்படையை இனி எந்த நாடும் எதிர்த்து வெற்றி பெறுதல் முடியாது" என ஜெர்மனியின் யுத்த மந்திரியான சேனுதிபதி கோயரிங் சென்ற வாரம் அந்நிய நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்குக் கூறியதில் இருந்து, ஜெர்மனி எவ்வாறு தனது பலத்தைப் பெருக்கிவருகிறதென்பது நன்கு புலனுகின்றது ஆனல் இப்படியெல்லாம் செய்தும் ஜெர்மனி யுத்தத்தை விரும்புகின்றதா? இல்லை! சமாதானம், சமத்துவம் என்பனவற்றை அது மனப்பூர்வமாக விழைகின்றது என்று சேனுதிபதி கோயரிங் கூறினர். "ஜெர்மனி சமாதானத்திற்கு எத்தகைய பங்கத்தையும் உண்டுபண்ணுது. பிறர் வற்புறுத்தலுக்கும் அது உட்பட்டுவிடாது. இப்போது ஜேர்மனி சமத்துவநிலை பெற்றுவிட்டது எனவே அதன் சமத்துவக் கோரிக்கையைப்பற்றி ஏனைய வல்லரசுகள் பேசுவது வீணுகும்" என்று கோயரிங் கூறினர். சேனுதிபதி கோயரிங்கின் கூற்று அத்தனையும் உண்மை என்பதை எவரும் மறுக்க வரார். ஆனல் அநியாயமான வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை ஜெர்மனிமீது சுமத்தி, அதனுல் இதுகாறும் அது தவித்துக்கொண்டிருக்கையில் அதைக் குளிரப் பார்த்துக்கொண்டிருந்த வல்லரசுகள் இனி என்செய்யும்?

° ° °

நமது பிரதம மந்திரி மிஸ்ரர் ரூம்சே மக்டோனல்டைப் பற்றி அறியாதார் இப் பூவுலகில் இல்லையெனலாம் அடிக்கடி தம் செயல்களையும் பேச்சுகளையும் மாற்றுவதில் இந்த மக்டோனல்டு ஓர் நிபுணர். இவர் இந்தியா விஷயமாகச் செய்த "நன்மை"கள் யாம் நன்கறிந்தன. அப்படிப்பட்ட இந்த மகான் ஜெர்மனிக்கு ஹிதோபதேசம் புரியப்புறப்பட்டிருக்கிறார். "சமாதானத்திற்கு வகுத்த வழியை மறுத்த குற்றம் ஜெர்மனியைச் சார்ந்ததாகும். ஜெர்மனி மட்டும் தனியாக வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையை நிராகரிக்கலாகாது. கட்டாய இராணுவப் பயிற்சிச் சட்டத்தை ஜெர்மனி இயற்றியது தவறு. 12 நீர்மூழ்கிக் கப்பல்களை அந்நாடு கட்டத் துணிந்தமை இங்கிலாந்துக்குத் துரோகம் செய்வதாகும்" என்று மகான் மக்டோனல்டு ஜெர்மனிமீது குற்றப்பத்திரிகை வாசிக்கிறார். "இன்னது செய்யவேண்டும், இன்னது செய்யவொண்ணுது என எம்மை எவரும் கட்டுப்படுத்த வொண்ணுது" என ஜெர்மன் சேனுதிபதி கோயரிங் கூறியதிலிருந்து மக்டோனல்டின் வேதாந்தம் ஜெர்மனியாரால் எவ்வாறு புறக்கணிக்கப்படுகிறதென்பது நன்கு விளங்கும். இதை இராஜதந்திரி மக்டோனல்டு நன்கு அறிவார். ஆனல், சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தால் ஜெர்மனியின் மீது சுமத்தப்படும் குற்றம் ஒருவாறு உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்னும் அபூர்வ யுக்தியை மக்டோனல்டு அநுட்டிக்கிறார் போலும். எதிரிகளைக் குற்றவாளிகள் என்று சொல்வதே பிரிட்டிஷ் இராஜதந்திரம் அல்லவா?

° ° °

பயந்தவன் கண்ணுக்குப் பார்த்ததெல்லாம் பேய்: இப்போது ஐரோப்பிய வல்லரசுகள் எப்போது ஜெர்மனி தம்மீது பாய்ந்துவிடுமோ என்று தனித்தனி அஞ்சிக்கொண்டே இருக்கின்றன. ஜெர்மனிய ஒற்றர்கள் தம் நாடுகளில் வசிப்பதாக அவை கனவு காண்கின்றன. அன்று இத்தலி நாட்டின்மீது ஓர் ஆகாயக் கப்பல் பறந்து சென்றதாம். அவ்வளவுதான்! உடனே அரை டஜன் இத்தலிய விமானங்கள் அவ்விமானத்தைத் துரத்தக் கிளம்பின. ஒருவாறு அவ்விமானத்தைப் பிடித்துக் கொண்டு வந்தன. அதை ஓட்டியவன் ஓர் ஜெர்மன் உத்தியோகத்தன். அவனிடம் புகைப்படம் பிடிக்கும் "காமிராவும்" இருந்ததாம். எனவே அவன் சிறைப்படுத்தப் பட்டான். உடனே ஜெர்மன் அரசினர் இதனையறிந்து தமது ஆளை விடுதலை செய்யும்படி கர்ச்சித்தனர்: "ஐயோ, அப்படிப்பட்ட செய்தி எமக்கு ஒன்றும் தெரியாதே" என்று முழுப் பூசினிக்காயைச் சோற்றுட் புதைப்பார்போல் இத்தலியர் கையை நீட்டினராம். என்னே கபடமும் வஞ்சகமும்!

° ° °

பழைய சம்பவங்களே மீண்டும் மீண்டும் நிகழ்கின்றன: சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்திற்குமுன் இருந்த அதே நிலைமை இப்போது இருக்கிறது. பிரான்ஸ் சென்ற வாரம் ருஷியாவுடன் ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறது. இவ்வுடன்படிக்கை, 1914-ம் ஆண்டிற்கு முன் நிகழ்ந்த உடன்படிக்கையைப்போல ஜெர்மனிக்கு மாறாகவே செய்யப்பட்டிருக்கிறதென்பது ஜெர்மன் கொள்கையாகும். ருஷியா ஜெர்மனிக்கு மாறாகச் சூழ்ச்சி செய்வதற்குப் போதிய காரணங்கள் உண்டு. ஜெர்மனி "பாஸிஸ்ட்" கொள்கைப்படி ஆட்சி செய்யப் படுகிறது ஹிட்லர் ருஷியரான சமதர்மிகள், பொதுவுடைமைக் கட்சியினரின் ஜென்ம சத்துரு. நாஸிஸர் ஜெர்மனியில் அதிகாரத்திற்கு வந்தபின், பொதுவுடைமைக் காரரை நின்றவிடந் தெரியாமல் ஒழித்து விட்டார்: பிரான்ஸ் தனது அயல் நாடாகிய ஜெர்மனி தன்னிலும் பார்க்கப் பலங்கொண்டு விட்டால் தன்னிலைமை என்னுகும் என அஞ்சுகின்றது. இதன்பொருட்டு இத்தலியையும் சிநேகிதம் செய்து கொண்டு இருக்கிறது. இப்போது ருஷியாவுடனும் உடன்படிக்கை செய்து விட்டது. இவ்வுடன்படிக்கைகளின் பயன்தான் என்ன? யுத்தமே! 1914 ம் ஆண்டு மேமாதம் இருந்த நிலையே இந்த ஆண்டு மேமாதத்திலும் இருக்கிறது.

° ° °

ஐரோப்பிய வல்லரசுகள் மாத்திரம் யுத்த தளவாடங்களைச் சேகரிக்கும் விஷயத்தில் ஈடுபடுகின்றனவல்ல. நமது ஆசியாவில் உள்ள ஜப்பானே தனது வருமானத்தில் அதிகமானவற்றை யுத்த தளவாடங்களுக்காகச் செலவழிக்கின்றது என்பதை அந்நாட்டுப்பொருளாதார இலாகாவே இப்போது வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களிலிருந்து அறியலாகும். விபரம் வருமாறு:—

1934—35-ம் ஆண்டில் வருமானத்தில் இருந்து செலவழிக்கும் விகிதம்

| | | |
|---|---|---|
| ஜப்பான் | 100க்கு | 46 62 |
| இங்கிலாந்து | ,, | 13 57 |
| அமெரிக்கா | ,, | 18 14 |
| ஜெர்மனி | ,, | 13·85 |
| பிரான்ஸ் | ,, | 21 57 |
| இற்றலி | ,, | 21 29 |

## சைவபரிபாலனசபை, யாழ்ப்பாணம்.

—(*)—

### கதிர்காமம் ஹிந்துக்களுக்கே.

—)o(—

### உபநிர்வாகசபைகள் நியமனம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் நிர்வாகசபைக் கூட்டம் ஒன்று சென்ற சனிக்கிழமை (4-5-35) பிற்பகல் இந்துசாதனலயத்திற் கூடியது.

தற்போது பௌத்தரின் அதிகாரத்தின் கீழ் உள்ள சைவாலயமாகிய கதிர்காமத்தைச் சட்டபூர்வமாகச் சைவமக்களின் நிர்வாகத்திலேயே விட அரசினரைக் கேட்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இது சம்பந்தமான நடைவடிக்கைகளைச் செய்வதற்கு ஓர் உபநிர்வாகசபை நியமிக்கப்பட்டது.

இலங்கைச் சிறைச்சாலைகளில் சிறையாளராய் வதியும் பிரமணர், சைவர் என்பவர்களின் உணவுவிஷயத்தில் அவர்களுக்கேற்ற சௌகரியங்கள் அளிக்கவேண்டுமென அரசினர்க்கு மனுப்பண்ணி ஏற்றனவற்றைச் செய்வதற்கு ஓர் உபநிர்வாகசபையும் நியமிக்கப்பட்டது.

வருகிற ஜூன்மாதம் 5ம் தேதி சபையின் வருடாந்தக் கூட்டத்தைக் கூட்டுவதென்று தற்காலிகமாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

### தானவரவு.

வண்ணார்பண்ணை நாகநாதம் ஸ்ரீ சு. வைரவநாதனின் தந்தை ஸ்ரீ வை. சுப்பையாவின் அந்தியேட்டி சென்ற செவ்வாய்க்கிழமை (7-5-35) நிகழ்ந்த போது சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 1 பெற்றும்.

—அடிசபைத் தனுதிகாரி



# குழந்தைகள் அதிகம் சக்தியை உபயோகிக்கின்றனர்.

அவர்கள் ஆரோக்கியமாய் வளரப் பிரத்தியேக பெலம் தேவை.

"ஹோர்லிக்ஸ்" பால் சக்தியைக் கொடுத்து, பெலமுள்ள எலும்புகளையும் தசைகளையும் வளர்க்கின்றது.

படிக்கும்போதும் விளையாடும்போதும் குழந்தைகள், தங்கள் மூளையையும் தேகத்தையும் நாள் முழுவதும் களைக்கப்பண்ணுகிறார்கள். இக் களைப்பைப் புஷ்டியான சாப்பாட்டினுற் சரிப்படுத்தவேண்டும், ஏனெனில், உபயோகிக்கப்படும் சக்தியை மாத்திரம் கொடுப்பதாற், தேக வளர்ச்சிக்கான ஜீவசத்துக்களையும் இச்சாப்பாடு கொடுத்தல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட இரு காரியங்களையும் ஓர் உணவு கொடுக்காவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி பங்கப்படும். அத்துடன் அவர்களின் பெலமும் குறையும் என்பதை வைத்திய நிபுணர் அறிவர். தேக வளர்ச்சியும் தேகபெலனும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாய்க் குழந்தைகள் விஷயத்தில் இருக்கவேண்டும்

பாதுகாப்புக்கேற்றது
ஹோர்லிக்ஸ் பாலே.

மனதை அதிலே, இதிலோ என்று விடவேண்டாம். உங்கள் குழந்தைகளுக்கு தினம் ஒருமுறை அல்லது இருமுறை ஹோர்லிக்ஸ் பாலாகாரத்தைக் கொடுத்து, அக்குழந்தைகள் பிறகாலத்தில் ஆரோக்கியத்துடன் வாழ இப்போதே அத்திவாரம் இடுங்கள்.

குழந்தைகளின் உணவுடன் ஹோர்லிக்ஸ் பாலாகாரமும் கொடுப்பதால் அவர்களுக்குத் தேவையானதெதுவோ அது கொடுக்கப்படுகிறது. நாடோறும் உபயோகமாகும் சக்திக்குப் பதிலாகப் புதிய சக்தியும், அவர்களின் வளர்ச்சிக்கான சேமப் புஷ்டியும் உதவப்படுகிறது. ஹோர்லிக்ஸில் உள்ள ஓர் விசேஷ மென்னவெனில் அதில் உள்ள சத்துப் பொருள்கள் யாவும் ஜீரணிக்கப்படுகின்றன. அது அப்படித் தேகத்தாற் கிரகிக்கப்படுகிறபடியால்தான், கடின பதார்த்தங்களை உட்கொள்ள முடியாத நோயாளிகளுக்கும் நோய்வந்தவர்களுக்கும் ஹோர்லிக்ஸை ஒழுங்காகக் கொடுக்கவேண்டுமென டக்டர்மார் விதிக்கின்றனர்.

ஹோர்லிக்ஸ் பரிமாறும் முறை.

பசுவின்பாலுடன், கோதுமை, மோல்ற்றட்வாளி என்பவற்றின் திறமான ஜீவசத்துப் பொருள்களைக் கொண்டது. ஹோர்லிக்ஸ் பால் முழுவதும் ஜீவசத்துப் பொருள் நிறைந்ததே. குழந்தைகள் இப்பாலை விரும்புகின்றனர். வெந்நீரிலாவது, தண்ணீரிலாவது நன்கு கரையும். ஹோர்லிக்ஸ் கலக்கும் கருவியால் கரைப்பின் மிக உருசியானது. இக்கருவி கடைகளில் அல்லது 75 சத முத்திரை யனுப்பி கொழும்பு மில்லர் அன் கம்பனி லிமிற்றெட் இல் பெறற்பாலன.




**ஹோர்லிக்ஸ்** முதல் முதலான மோல்ற்றட் பால்

சாதாரண பால் அல்லது சொக்கலேற் கலந்தது.
முழுவதும் தேகபுஷ்டிக்கான உணவு.

Mis 40 2-5-35 to 16-5-35



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இசனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரை, சாலாமுஸ்லி, சப்பேதுமுஸ்லி, பிஸ்தஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாமபிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.
(Y. 17 1.11-34 to 31-12-35) இலோன்



# இலங்கா ஆயுள்வேத வைத்தியசாலை.

## அவுஷத விபரம்.

### கிரந்தி எண்ணெய்.

இவ் எண்ணெய் குழந்தைகளுக்குக் காணும் கிரந்திக்காய்ச்சல், கொதிக்காய்ச்சல், செங்கிரந்தி, கருங்கிரந்தி, செவ்வாப்பு, செங்கரப்பன், அரிகிரந்தி, அக்கி, அசுகுணி இவைகட்கு உள்ளுக்குங் கொடுத்துத் தலைக்கும் வைக்கக்கூடியது. இன்னும் வயதில் முதிர்ந்தவர்க்கு உண்டாகும் நோய்கட்கும் உபயோகப்படக்கூடியது.
3 அவுன்ஸ் சீசா ரூபா 1 00. 6 அவுன்ஸ் சீசா ரூபா 1 90. 12 அவுன்ஸ் சீசா ரூபா 3 75.

### மாந்தபேதி எண்ணெய்.

இவ் எண்ணெய் மந்தம், மாந்தம், மலபந்தம், வயிற்றுப்பிசம், வாயு, சீதக்கட்டு, வயிற்றுவலி, கிருமிரோகங்கள், மாந்தசுரம், வயிறூதி அடிக்கடி மலமிறங்குதல் ஆகிய இவைகளை மாற்றக்கூடியது.
சிசுக்களுக்கு ¼ முதல் ½ தேக்கரண்டி, பாலர்களுக்கு ½ முதல் 2 தேக்கரண்டி, வாலிபர் - வயோதிபர் 2 முதல் 4 தேக்கரண்டி, வெந்நீர், தேநீர், பால்கலந்து குடிக்கவும். சீசா விலை சதம் 75.

### கந்தகமூலி ரசாயனம்.

ஆண், பெண், இருபாலார்க்கும் உபயோகமாகும்படி செய்த இந்த ரசாயனம்.

சோகை, பாண்டு, வீக்கம், காமாலை, பிரேக பாரிப்பு, நீர்க்கோவை, பிறநீர்க்கோவை, பெருவயிறு, நீராமை, பேராமை, கவுசி, கெண்டை முதலிய உதரரோகங்களையும்; சொறி, கரப்பன், கிரந்தி படர்தாமரை, அரிப்பு, தடிப்பு, கட்டிகள், கிரந்திநீர்ச் சம்பந்தமான மற்றும் ரோகங்களையும்; மலபந்தம், சிறுநீர்க் குறைவு கால் கை உளைவு, கடுப்பு அசதி, களை, முதலாம் ரோகங்களையுந் தீர்க்கும்.

இன்னும் கெற்பாசய கிரந்தி, சூதகவாய்வு, சூதககாலவயிற்றுவலி, குத்து, சூதகச்சிக்கல், சூதகக்கட்டி காலந்தவறிச் சூதகங் காணுதல், சூதகம் வராது தடைபடல், சூதகச் சிக்கலினால் பிரேகம் பாரித்தல், மலட்டுரோகம், அடிக்கடி கெற்பமழிதல், கெற்பத்தில் சிசுவை மரிக்கச் செய்தல், கெற்பமுண்டாகாமை, கெற்பாசயக்கிருமி, கெற்பாசயத்திற் சதை வளர்தல், சவ்வுவளர்தல், பாகபற்றியிருத்தல், மதர்த்திருத்தலாகிய கெற்பாசய ரோகங்கள் யாவையும் நீக்கிக் கெற்பமுண்டாகச் செய்யும்.

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25,

### மிளகு சந்தனதித் தைலம்.

தைலங்களுள் அதி குளிர்ச்சி நிறைந்தது, குணத்தில் விசேஷித்ததுமான இத்தைலம் பித்ததேகிகளுக்கும், அதிசூடான தேகிகட்கும் மாத்திரமல்ல உட்காய்ச்சல், அஸ்தி சுரம், கணைக்காய்ச்சல், தலைக்கொதி கண்ணெரிவு, பித்தமயக்கம், தேகவெளுப்பு, சோகை முதலிய நோய்களையும் மாற்றும்
12 அவுன்ஸ் விலை ரூபா 2—25.

### பரிமள கூந்தல் தைலம்.

இது மயிர் அதிகமாக வளர்தற்கும் பெண்களுக்கு அழகு பயக்கும் கரும்கூந்தல் செறிவதற்கும் இன்றியமையாதது. தலையிலும் கண்களிலும் வரக்கூடிய சொறிவு, எரிவுகளைப் போக்கவல்லது, மனதைடக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும், முகத்திற்கு அழகும் வசீகரணமும் அளிக்கும். போத்தில் விலை ரூ. —1.00.

### சஞ்சீவித் தைலம்.

வெளிப்பிரயோகமாகவே சன்னி, வலிப்பு, வாதம், சுவாசகாசம், இருமல், தலைவலி, வயிற்றுவலி, புதிய காயங்கள், நோவு, முறிவு, நெரிவு, வீக்கம், விரணம், மூலமுளை, படர்தாமரை மற்றும் எவ்வித நோய்களையும் மாற்றும். விலை சதம்—50.

மகா கோரோசனை மாத்திரை  விலை சதம் 75.
இராஜரிஷி சஞ்சீவி மாத்திரை  விலை சதம் 60.

தலைமை வைத்தியசாலை,
மணிக்கூட்டுத்தெரு யாழ்ப்பாணம்.

கிளைவைத்தியசாலை,
101. பெரியதெரு யாழ்ப்பாணமும்.
(Y. 69. 18-6-34 to 17-6-35.)  மன்னார், நெல்லியடி.



## சோதிஸ்காமகிரியி னறிக்கை.

சமயாபிமான சீலர்களே!

தக்ஷிணகைலாயம் என வழங்கும் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பக்தர்குழாங்கள் மலைப் பிரதக்ஷணம் புரிவது மிகவும் அபூர்வமான காரியமாயிருந்தமையால் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தியினருளால் சென்ற 1927-ம் ஆண்டில் மறைந்திருந்த பாதையைத் திருத்தலானேன். அந்நாட்டொடக்கம் யாத்திரிகர்களின் தாகசாந்தியின் பொருட்டு அச்சிகரத்தே ஓர் தண்ணீர்ப்பந்தரையுமமைத்து அஃது பல புண்ணிய சீலர்களினது ஊக்கத்தால் வருடாவருடம் செவ்வனே நடைபெற்று வந்தது. சென்ற வருடம் (1934) ஆடி மகோற்சவ 15 தினங்களிலும் மாணிக்க கங்கையிலிருந்து ஒரு தகரம் தண்ணீர் 40 சதவீதம் எடுப்பித்து இவ்வறனை வழுவாது கடைப்பிடித்தேன். இவ்வருடமும் இத்தரும கைங்கரியத்தை இடையூறின்றி நடாத்தப் போதிய பணமின்மையால், சைவாபிமானிக ளனைவருமீடுபட்டு இத் திருத்தொண்டைப் பூர்த்தி செய்து வைக்குமாறு தங்கள் அடிபணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன். சைவசமய தனவந்தர்க ளிருப்பார்களேயானுல் யாத்திரிகர்களது தாகத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு இத்தண்ணீர்ப் பந்தரை யேற்றுத் தாங்களே நடாத்துவார்களாக! அனேக சைவாபிமாபிமானிகள் இத் திருத்தொண்டி லீடுபடப் பின்வாங்குகின்றார்கள். அந்தோ இவர்களது பக்தியின் மாண்புதானென்னை?

ஸ்ரீ ஷண்முகப்பெருமானைப் பிரார்த்தித்து ஏதேனும் பணம் வைத்திருப்பவர்கள் அல்லது யாத்திரீகர்பணியிலும் தொண்டர்பணியிலும் பற்றுடையோர். தங்கள் தங்களாலியன்ற பண உதவி புரிந்து இறைவனருளைப் பெற்றுய்வார்களாக!!

பணத்தைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனி ஓடர் அல்லது போஸ்ரர் ஓடர் மூலமனுப்பவும்.

ஸ்ரீ கதிரமலை அடியான்
ரமண—சங்குசாது
கதிர்காமம், நிசைமகுளம.

21—4—35
(Q. 20. 25 4 to 24-7-35.)


பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையாகசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on THURSDAY the 9TH MAY 1935.